janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 ஆகஸ்ட் 20 - ஆகஸ்ட் 26 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 20




# பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு!

## தமிழ்நாடு முழுவதும் செப். 12, 13, 14ல் தொடர் மறியல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக்குழு முடிவு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் சேலம் காட்டூரில் ஆகஸ்ட் 14 முதல் 17 வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதல் இரண்டு நாட்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:**

### தீர்மானம் : 1

பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு, செப். 12, 13, 14 தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் தொடர் மறியல்



ஒன்றிய அரசின் மக்கள் விரோத பொருளாதார கொள்கைகளால் விலைவாசி உச்சத்துக்கு சென்றுள்ளது. அனைத்துப் பொருட்களின் விலையும் தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்கின்றன. அரிசி விலை 15 சதவீதத்திற்கும் மேல் உயர்ந்திருக்கிறது. சமையல் எண்ணெய்களின் விலை 3 மடங்கு வரை அதிகரித்து இருக்கிறது. 2014ல் சமையல் எரிவாயு சிலிண்டர் ரூ.410க்கு விற்றது. இப்போது ரூ.1240 என அநியாயமாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு தரும் மானியம் நேரடியாக பயனாளர்களை சென்றடைய வேண்டும் என்பதால் வங்கி மூலம் பணம் அனுப்புகிறோம் என்று சொன்னது ஏமாற்று வேலை என்பது உறுதியாகி இருக்கிறது.

மோடி அரசு வந்த பின்பு பெட்ரோல் விலை 75% அதிகரித்தது. சர்வதேச சந்தையில் பெட்ரோலிய பொருட்களுடைய விலை குறைகிறது. ஆனால் இந்தியாவில் மோடி அரசு விலையைக் குறைக்கவில்லை பெட்ரோலியப் பொருட்கள் மீது 260% வரி விதிக்கப்படுகிறது. உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு அதிகமான வரி இல்லை.

சென்ற நான்காண்டுகளில் சராசரியாக ஆண்டுக்கு ரூ.66 ஆயிரம் கோடி லாபம் பெற்ற எண்ணெய் நிறுவனங்கள், சென்ற ஆண்டில் மட்டும் ஒரு லட்சம் கோடி ரூபாய் லாபம் ஈட்டி உள்ளன. ஒவ்வொரு லிட்டர் பெட்ரோலுக்கும் பத்து ரூபாய் லாபம் என்று மதிப்பிடப்படுகிறது. பெட்ரோல், டீசல் விலையேற்றம் அனைத்துப் பொருட்களின் விலை உயர்வுக்கும் காரணமாகிறது.

பண மதிப்பிழப்பு நடவடிக்கையும், அதனைத் தொடர்ந்து விளைவுகளைப் பற்றி அக்கறையே இல்லாமல், பண வசூலை மட்டுமே குறியாகக் கொண்டு விதிக்கப்பட்ட ஜிஎஸ்டி வரியும், சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை சீரழித்து விட்டன. தொடர்ந்து வரி விகிதம் அதிகரிக்கப்படுவதோடு, வரி வரையறைக்குள் புதிய பொருட்களும் கொண்டு வரப்படுகின்றன. உணவு தானியங்கள், பால், தயிர் ஆகியவற்றின் மீது கூட ஜிஎஸ்டி வரி போடப்பட்டுள்ளது. பெரும்பாலான பொருள்களின் மீது 28 சதவீத ஜிஎஸ்டி எனும் அநியாய வரி விதிக்கப்படுகிறது.

ஒருபுறம் இவை அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரிக்கின்றன.

மறுபுறத்தில் தமிழ்நாட்டின் ஜவுளி, பின்னலாடை, ஆயத்த ஆடை, பம்ப்செட், எஞ்சினியரிங் பொருட்கள் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்து வந்த நிறுவனங்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளன. இதனால் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலை பறிபோய்விட்டது. அரசு, ரயில்வே, பொதுத்துறை நிறுவனங்களில் பல லட்சக்கணக்கான பணியிடங்கள் காலியாக இருந்தும் அவற்றை நிரப்ப அரசு மறுக்கிறது.

ஊதியத்துக்கும், வேலை வாய்ப்புக்கும், உத்தரவாதம் அளிக்கும் நிரந்தர தொழிலாளர் முறைமை, படிப்படியாக கைவிடப்படுகிறது. ராணுவ வீரர்களைக் கூட தற்காலிகமாக நியமிக்கும் அக்னிபாத் முறை செயல்படுத்தப்படுகிறது. சம்பளம் பணி நிரந்தரம் சமூக பாதுகாப்பு உள்ளிட்ட எதை பற்றியும் கோரிக்கை வைத்தால் வேலை பறிக்கப்பட்டு விடும் என்ற அச்சத்தில் அனைத்து துறை தொழிலாளர்களும் அற்றைக் கூலிகளாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரு முனையில் வருவாய்க் குறைவும், மறுமுனையில் விலைவாசி ஏற்றமும் சாமானிய மக்கள் வாழ்க்கையை நடத்த முடியாத அவல நிலைக்கு தள்ளியுள்ளது. பிரதான் மந்திரி கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் வழங்கி வந்த அரிசியை ஒன்றிய அரசு 31.12.2022 இல் நிறுத்திவிட்டது. அதுபோலவே இந்திய உணவுக் கழகத்திலிருந்து மாநில அரசுகளின் மக்கள் நலத் திட்டங்களுக்காக கிலோ ரூ.38 எனும் விலையில் வழங்கப்பட்ட அரிசி முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்த அரிசி தற்போது தனியாருக்கு ஏலம் மூலம் கொடுக்கப்படுகிறது. இதை மாநில அரசுகளுக்கு தரக்கூடாது என்ற நிபந்தனை வேறு. பொது விநியோகத் திட்டத்துக்காக 50,000 மெட்ரிக் டன் அரிசியை வெளிச்சந்தையில் வாங்கும் நிலைக்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு மோடி பிரதமர் பதவியேற்ற போது விலைவாசியை சரிபாதியாய்க் குறைப்பேன், ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பேன் என்று வாக்குறுதி அளித்தார். ஆனால் நடந்துள்ளதோ அதற்கு நேர் மாறானதாகும்.

மாநில அரசுகளின் உரிமைகளை படிப்படியாக அரித்து அனைத்து அதிகாரங்களையும் மையத்தில் குவிக்கும் நடவடிக்கையில் ஒன்றிய அரசு ஈடுபடுகிறது. குறிப்பாக தமிழ்நாட்டின் மீது வன்மத்தோடு தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்ற உந்துதலை, 'ஆணவம்' என்று ஒன்றிய நிதியமைச்சர் நாடாளுமன்றத்திலேயே பேசியிருக்கிறார்.

பழைய சட்டங்களை மாற்றி, புதிய சட்டங்கள் கொண்டு வரும்போது அவை அனைத்துக்கும் இந்தியில் பெயர் வைக்கப்படுகிறது. இதற்கு முன் இருந்த சட்டங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும், அந்தந்த மொழியில் பேசப்படும் போது மொழி மாற்றம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. தற்போது எந்த மொழியில் சொன்னாலும் அது இந்தியிலேயே இருக்க வேண்டும் என்ற நிலை மேற்கொள்ளப்படுகிறது. 12 கோடி பேர் பேசும் தமிழ் மொழி மேம்பாட்டுக்கு ரூ.11.86 கோடியை ஒதுக்கும் ஒன்றிய அரசு, சில ஆயிரம் பேர் பேசும் சம்ஸ்கிருதத்திற்கு ரூ.198.83 கோடியை ஒதுக்கி பாரபட்சம் காட்டுகிறது. அனைத்து மாநிலங்களும் ஆட்சி மொழியாக இந்தியை ஏற்றே ஆக வேண்டும் என்று உள்துறை அமைச்சர் பேசியிருக்கிறார். தமிழைப் பழித்து இந்தியைத் திணிக்கும் ஒன்றிய அரசின் முயற்சி கண்டனத்திற்குரியதாகும்.

தனது தோல்விகளை மறைக்கவும், தேர்தல் ஆதாயத்தை முன்னிறுத்தி மக்களை மத ரீதியாக பிளவுபடுத்தும் படுபாதக வேலையை ஆர்எஸ்எஸ் பாஜக தொடர்ந்து செய்கிறது. மணிப்பூர் மதக் கலவரங்களால் பற்றி எரிகிறது. ஒன்றியத்திலும், மாநிலத்திலும் இரட்டை எஞ்சின் ஆட்சி செலுத்தும் பாஜக அரசு அதற்கு தூபமிட்டு வளர்க்கிறது.


கார்ப்பரேட்டுகளுக்கு நாட்டின்



தொடர்ச்சி 6ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# இன்றும் தொடர்கின்றதா?



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாடு விடுதலை பெற்றுள்ளது! எத்தகைய விடுதலை – அரசியல் விடுதலை – மற்ற விடுதலைகள் கேள்விக்குறியாகவே உள்ளதை உணர்ந்திடல் வேண்டும்.**



மதவெறி, சாதிய வெறிகள் தலைதூக்கி நிற்கின்றன. இவைகள் முற்றிலும் கூடாது. இத்தகைய வெறிகள் அற்ற சமூகம் வேண்டும். அதற்கான பெரும் போரை நாம் தொடர்கின்றோம்.

ஆனால் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் கலகம் மூட்டுவதையே தங்களின் அரசியல் கொள்கையாக லட்சியமாகக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் இருக்கின்றன என்பது மட்டுமல்ல வேகமாக செய்ல்படுகின்றன என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏன் எனில் அதுதான் அவர்களின் மூலதனம் இதனைக் கொண்டே சமூக மாற்றங்களை நிகழச் செய்திடாமல் தடுத்து, தங்களின் நான்கு வர்ண பேதத்தை நிலை நிறுத்திக்கொள்ள முயல்கின்றனர்.

முதலாளித்துவம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள, மக்களை ஒன்று சேரவிடாமல் பிளவுபடுத்தி, மோதலை உருவாக்கி தன் இலாபத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டே இருக்கும்.

சுரண்டப்படும் மக்கள் தாங்கள் சுரண்டப்படுவதை, தங்களின் அடிமைத்தனத்தை மறந்து மதத்தின் பேரால், சாதியின் பேரால் தங்களில் யார் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என வீராப்பு பேசி தங்களை தாங்களே அழித்துக் கொண்டிருப்பதை அறியாமல், சூழ்ச்சிக்கு இரையாகி பலியாகி வருகின்றனர்.

இத்தகைய பாதகங்கள் இன்று நேற்றல்ல; காலம் காலமாகத் தொடர்கிறது; இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியை அனைவரும் அறிவோம். நாங்குநேரி சட்டப் பேரவை தொகுதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் எஸ்.வி. கிருஷ்ணன் போட்டியிட்டு வெற்றி பெற்ற இடமாகும். இன்னும் தோழர் எஸ்.வி. கிருஷ்ணன் அந்தப் பகுதி மக்களிடையே செல்வாக்கு மிக்க தலைவராகவும், அனைத்து தரப்பு மக்களின் ஆதரவை பெற்றவராகவும் திகழ்ந்து வருகிறார். அங்கே உள்ள ஒரு மடத்தின் ஆதிக்கத்தை எதிர்த்து தோழர் இரா. நல்லகண்ணு தலைமையில் நடைபெற்ற போராட்டங்கள், வெற்றிகள் அனைத்தும் வரலாற்றில் இடம் பெற்றவை. அப்படிப்பட்ட பகுதியில், பெருந்தெருவில் உள்ள பட்டியல் இனத்தைச் சேர்ந்த சின்னதுரை என்கிற 17 வயது மாணவன் நன்கு படிக்கக் கூடியவர். அவர் நன்றாக படிக்கின்றார் அவரைப் போன்று மற்ற மாணவர்களும் நன்கு படியுங்கள் என்று வகுப்பாசிரியர் பிற மாணவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

சின்னதுரைக்கு ஆசிரியர்களால் கிடைத்துவிட்ட பாராட்டு பாதகமாக முடிந்தது.

உயர் சாதி பிள்ளைகளுக்கு பாராட்டு இல்லை. பட்டியல் இன மாணவர்களுக்கு பாராட்டா?

கர்ணன் மாவீரன் அவனை வெல்பவர் யாருமில்லை. ஆனால் அவன் சத்ரியன் அல்ல, தேரோட்டி மகன் எனக்கூறி வில்வித்தை போட்டி மைதானத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டான், இது மகாபாரதம் போதிக்கும் கதை. மகாபாரதம் இன்றும் தொடர்கின்றதா?

சின்னதுரையை வேறு வகுப்பை சேர்ந்த மாணவர்கள் சீண்டினார்கள் அச்சுறுத்தினார்கள் அச்சமுற்ற சின்னதுரை பள்ளி செல்வதை நிறுத்தினான். பல நாட்கள் பள்ளி செல்லவில்லை.

மகன் பள்ளி செல்லாமல் முடங்கி கிடந்தது அறிந்து அவன் படித்து பட்டம் பெற வேண்டுமென்று விரும்பிய தாய், பள்ளிக்கு அழைத்துச் சென்று தலைமை ஆசிரியரை அணுகி இப்பள்ளியில் படித்தால் அவனுக்கு ஆபத்து, ஆகவே வேறு பள்ளியில் சேர்த்து விடுகின்றோம் அவனது டி.சி.யை கொடுத்து விடுங்கள் என மன்றாட, தலைமை ஆசிரியர் மறுத்து, நன்றாக படிக்கிறான் அவனை ஏன் நீங்கள் இங்கே படிக்க வேண்டாம் என கூறுகின்றீர்கள். அவனது பிரச்சினையை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என ஆறுதல் கூறி நம்பிக்கையூட்டி அனுப்பி வைத்தனர்.

விளைவு, சாதி வெறி கொண்ட மாணவர்கள் சின்னதுரை வீட்டுக்கு ஆயுதங்களோடு சென்றார்கள்; சரமாரியாக வெட்டினார்கள்; அவருக்கு தலை, உடல் முழுவதும் காயம். தடுக்கச் சென்ற அவரது தங்கையும் வெட்டப்பட்டார். இருவருக்கும் பலத்த காயங்கள். வீடு முழுவதும் ரத்தப் பெருக்கு. இதனை பார்த்த சின்னதுரையின் உறவினர் அதிர்ச்சியில் அதே இடத்தில் மரணம் அடைந்தார். ஒரே குடும்பத்தில் அண்ணன், தங்கை படுகாயம், ஒருவர் மரணம் என்ற பெருங்கொடுமை நிகழ்த்தப்பட்டுள்ளது.

முன்னேறி விட்டோம் என்பார்கள்! எங்கே முன்னேறி விட்டோம் என்பதனை எண்ணிப் பாருங்கள்.

இத்தகைய சம்பவங்கள் சிலருக்கு எளிதாக தோன்றினாலும் அப்படி எளிதாக கடந்து சென்று விடக்கூடிய செயல் அல்ல.

மிக மிக வன்மையாக கண்டிக்க தக்க செயல் இத்தகைய சம்பவங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது, கூடாது!

இது போன்ற சம்பவங்களை கண்டும் காணாமல் இருக்கும் மனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.





அவர்கள் மனிதர்கள் அல்ல, மனித உருவில் நடமாடும் மிருகங்கள் எனக் கூறினால் தவறு இல்லை.

படிப்பில் பொறாமைப்பட வேண்டும், அந்த பொறாமை அரிவாள் தூக்குவது அல்ல. தன்னை தயார்படுத்திக் கொள்ளும் பொறாமையாக அது அமைந்திடல் வேண்டும்.

மாறாக கீழ் சாதிக்காரன் தன்னைவிட நன்றாக படிக்கிறான். அதிக மதிப்பெண் எடுக்கிறான், ஆசிரியர்கள் பாராட்டுகிறார்கள் என ஆத்திரமுற்று அரிவாளை தூக்குவதால் என்ன பலன்?

சாதிகள் இல்லடி பாப்பா என பாரதியார் பாடலை படித்த மாணவர்கள், அவர்களாக அரிவாளை தூக்கினார்களா? அல்லது தூக்க வைக்கப்பட்டார்களா?

அங்கே உள்ள மடம் அப்பகுதி மக்களின் அறியாமையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அடியாட்களையும் அரிவாள் தூக்கிகளையும் உருவாக்குவதாக சொல்லப்படுவது குறித்து, திராவிட மாடல் ஆட்சி கவனம் செலுத்திட வேண்டும்.

சின்னதுரை பயிலும் பள்ளியில் சாதிய தீண்டாமை எழுதப்படாத சட்டமாக, விதியாக பின்பற்றப்பட்டு வருகின்றது என்பது குறித்தும், இதற்கு எதிராக கருத்துச் சொல்லும் ஆசிரியர்களுக்கே, அங்கு பாதுகாப்பற்ற நிலை உள்ளதாக கூறப்படுவது குறித்தும் தமிழக அரசும் குறிப்பாக கல்வித் துறையும் கவனம் செலுத்திட வேண்டும்.

இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறக் கூடாத வகையில் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

பாதிக்கப்பட்ட சின்னதுரை மற்றும் அவரது சகோதரி நெல்லை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் மாணவர்கள். சின்னதுரையை பழிவாங்க துடித்திட்ட அவர்கள், அவர்களின் வாழ்க்கையையும் நாசமாக்கிக் கொண்டார்கள்.

இவர்கள் அரிவாளுடன் அணிவகுக்க, அவர்கள் மட்டும்தான் காரணம் என்பது ஏற்கவியலாத ஒன்றாக உள்ளது.

பின்னிருந்து இயக்கியவர்கள் யார் என்பது கண்டறியப்படவும், அவர்கள் யாராக இருப்பினும் தண்டிக்கப்படவும் வேண்டும்.


இத்தகைய நிகழ்வுகள் இனியும் தொடராமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மொத்தத்தில், தேவைகள் உள்ளோர் அனைவருக்கும் விழிப்புணர்வு அவசியம்.

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# குரல் வளையை நெரிக்கும் கொலைகாரச் சட்டங்கள்



டி.எம்.மூர்த்தி

**இந்திய நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் 23 நாட்களில் 17 அமர்வுகளாக நடைபெற்றது. மணிப்பூரைப் பற்றி பேசுவதற்கு வர முடியாது என்று அடம் பிடித்த பிரதமரை, நம்பிக்கை இல்லா தீர்மானம் வைத்து வரவழைக்க வேண்டியதாயிற்று. நம்பிக்கை இல்லா தீர்மானம் தோற்று இருக்கலாம்; ஆனால் பிரதமரை வர வைப்பது இந்தியா கூட்டணி கட்சிகள் வெற்றி பெற்று விட்டன.**

ஒரு நிமிடம் கூட விவாதிக்கவில்லை: பிரதமர் வரவேண்டும் என்று கூச்சலும் குழப்பமும் நிலவிக் கொண்டிருந்த சூழலிலேயே, ஒன்றிய அரசு தனக்கான சட்ட மசோதாக்களை வேக வேகமாக திணித்து நிறைவேற்றுவதில் குறியாக இருந்தது. 25 மசோதாக்கள் முன்வைக்கப்பட்டு அவற்றில் 22 நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் எட்டு மசோதாக்கள் ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் நிறைவேற்றப்பட்டவை.

காலனி ஆதிக்க காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை, நவீன காலத்திற்கு ஏற்றாற் போல மாற்றுகிறோம் என்று சொல்லி, ஒரு மறு காலனியாதிக்க நடைமுறையை மோடி அரசு கட்டமைத்துக் கொண்டிருக்கிறது.

அன்றைய சட்டங்களின் பெயர்கள் ஆங்கிலத்தில் இருந்தன. ஆனால் எந்த மொழியில் அந்தச் சட்டத்தின் பெயர் சொல்லப்படுகிறதோ, அந்த மொழியில் சட்டத்தின் பெயர் மொழிபெயர்க்கப்பட்டு பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது. ஆனால் இப்போது எந்த மொழியில் எழுதினாலும், அது இந்தியாகவே இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

### இந்தி மொழியில் சட்டங்களின் பெயர்கள்:


இந்திய தண்டனைச் சட்டம் (இந்தியன் பீனல் கோட் ஐபிசி)1860, பாரதிய நியாய சன்ஹிதா 2023 என்றும் இந்திய குற்றவியல் சட்டம் (கிரிமினல் ப்ரொசிஜர் கோட்) 1898, பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023 என்றும் இந்திய சாட்சியச் சட்டம் (இந்தியன் எவிடன்ஸ் ஆக்ட்)1772, பாரதிய சாக்ஷா மசோதா 2023 என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

காலனி ஆதிக்க காலத்து அகங்கார, ஆணவ, அதிகாரங்கள் எவையும் இச்சட்டங்களிலிருந்து ஒதுக்கப்படவில்லை. ஆனால் அதனிலும் மோசமாக, இந்தியாவின் குற்றவியல் தண்டனை சட்டங்கள், ரகசியமான, திரை மறைவான, தெளிவின்றி கலங்கலான கட்டமைப்பில் மாற்றப்பட்டுள்ளதுதான் அபாயகரமானதாகும். அரசு கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் மீது ‘தேசத்துரோகம்’ எனும் குற்றம் சுமத்தப்பட்டதை, இந்திய உச்சநீதிமன்றம் கண்டித்திருந்தது. எனவே தேசத் துரோகம் என்று சொல் மட்டுமே மாற்றப்பட்டுள்ளது. ஆனால் சட்ட விதிகள் திருத்தப்படாமல் அப்படியே உள்ளன.

### அடித்துக் கொன்றால் கொலையில்லை:

கும்பலாகக் கூடி ஒருவரை அடித்துக் கொல்வது (விளிஙி லிசீழிசிபிமிழிநி) இதுவரை இந்திய தண்டனைச் சட்டம் 302வது பிரிவின் கீழ் வந்தது. அதற்கு மரண தண்டனை அல்லது ஆயுட்காலச் சிறை என்பது தண்டனையாக இருந்தது.

ஆனால் இப்போது அந்த குற்றச்செயல்களில் ஈடுபவர்களுக்கு வசதியாக அதிகபட்சம் ஏழு ஆண்டு சிறை தண்டனை என்று சட்டத்தை நீர்த்துப்போகச் செய்துள்ளனர்.




அதேபோல வெறுப்புப் பேச்சு இப்போது தண்டனைக்குரியது என்று அமித்ஷா கூறியிருக்கிறார். இது ஒன்றும் புதிதல்ல; ஏற்கனவே தண்டனைச் சட்டத்தில் இருந்ததுதான். ஜீரோ எஃப்ஐஆர், இஎஃப்ஐஆர் ஆகியவற்றை சேர்த்து இருப்பதாக சொன்னாலும், இவை எல்லாம் ஐக்கிய முற்போக்கு கூட்டணி காலத்திலேயே நுழைக்கப்பட்டு அமுலில் உள்ளவைதான்.

### டெல்லி மாநில அரசுக்கு அதிகாரமில்லை

மாநில உரிமையைப் பறித்து, மாநில அரசை அதிகாரமற்றதாக்கும் வகையில் ‘தேசிய தலைநகர் தில்லிப் பிரதேச திருத்தச் சட்டம், 2023’ உள்ளது. மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்வு செய்து, தமக்கான சட்டப்பேரவையை அமைக்கிறார்கள். அந்தச் சட்டப்பேரவை, அதிகார வர்க்கத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து, ஆட்சியை வழிநடத்துகிறது. மக்களின் நலனுக்கு விரோதமாக சட்டப்பேரவை செயல்படுமானால் அடுத்த தேர்தலில் அதனை மாற்றியமைக்கும் அதிகாரம் மக்களுக்கு உள்ளது. ஆனால் டெல்லி மாநில அரசு அதிகாரிகள், ஒன்றிய அரசு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அதாவது டெல்லி மாநில அரசு அந்த மாநில அதிகாரிகளைக் கட்டுப்படுத்தவோ, உத்தரவிடவோ முடியாது எனும் சூழலை இந்த சட்டம் உருவாக்கி இருக்கிறது.

ஏற்கனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு அதன் கீழ் பணி புரியும் அதிகாரிகள் வழி நடக்கும் அதிகாரம் உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. அதனைச் சிதைத்து மாற்றுவதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

### இளையராஜா, அன்புமணி, அதிமுக

காங்கிரஸ் இந்த மசோதாவை எதிர்ப்பதால் மாநிலங்களவையில் நிறைவேறுவது கடினம் எனக் கருதப்பட்டது. அதனால்தான் இளையராஜா நாடாளுமன்றத்துக்கு சென்று வாக்களித்தார். அதுவரை நடந்த மழைக்கால கூட்டத்தொடர் கூட்டத்துக்குப் போகாத அன்புமணி ராமதாஸ், அந்த வாக்கெடுப்புக்கு சென்று வாக்களித்தார். மாநில சுயாட்சியை தன் உயிர் முழக்கமாக வைத்த அண்ணாவின் பெயரை தாங்கி நிற்கும் அஇஅதிமுக, மாநில உரிமையைப் பறிக்கும் இந்த மசோதாவுக்கு வெட்கமின்றி ஆதரவாக வாக்களித்தது. இவையாவும் போதாது என்ற நிலையில், மதில் மேல் பூனையாக நின்று கொண்டிருக்கும் பிஜூ ஜனதா தளம், ஒய். எஸ். ஆர் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவைப் பெற்று, இந்த மசோதாவை ஒன்றிய அரசு நிறைவேற்றி விட்டது.

“டெல்லி அரசு தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது” என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா பகிரங்கமாகவே பேசி இருக்கிறார். இது அரசியல் சட்டம் வடிவமைத்துள்ள கூட்டாட்சி முறைமைக்கு எதிரானதாகும்.

### அந்தரங்கம் விற்பனைக்கு

டிஜிட்டல் பர்சனல் டேட்டா ப்ரொட்டேக்ஷன் (எண்ணியல் அந்தரங்க தரவு பாதுகாப்பு) மசோதா நிறைவேற்றப்பட்டு 10 மாதங்களுக்குள் அமல் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது.

இன்டர்நெட் வசதியை வழங்கும் நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களின் அந்தரங்கத் தகவல்களை பெற்று விடுகின்றன. அவற்றை அந்த நிறுவனங்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இந்தச் சட்டம் வரையறுக்கிறது. இன்டர்நெட் வாடிக்கையாளர்களின் அந்தரங்க விவரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் வெளிநாடுகளுக்கு விற்றுக் கொள்ளலாம் என இச்சட்டம் அனுமதிக்கிறது.

அதே நேரத்தில் பேஸ்புக், ட்விட்டர் (இப்போது ‘எக்ஸ்’), வாட்ஸ்ஆப், இன்ஸ்டாகிராம், டெலிகிராம் உள்ளிட்ட செயலிகளில் பகிரப்படும் விஷயங்களைக் கேட்டு தகவல் பெறவும், அதில் தான் விரும்பாத பதிவுகளை மற்றவர்கள் பார்க்க இயலாதவாறு முடக்கி வைக்கவும் அரசாங்கத்திற்கு இந்தச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது. இதனைச் செய்வதற்கு “தரவு பாதுகாப்பு வாரியம்” ஒன்றை ஒன்றிய அரசு நியமிக்கிறது.

தனது வாடிக்கையாளர்களின் பதிவுகளை வெளியில் தெரியாமல் முடக்கி வைக்குமாறு, உலக நாடுகளிலேயே மிக அதிகமாக உத்தரவிடும் நாடு இந்தியாதான் என்று ட்விட்டர் நிறுவனம் அறிவித்திருந்தது நமது நினைவுக்கு வருகிறது. இப்போது சட்ட பூர்வமாகவே அதற்கான அதிகாரத்தை இச்சட்டம் வழிவகை செய்கிறது.

### பத்திரிக்கை சுதந்திரத்தை பறிக்கும் சட்டம்

பத்திரிகை மற்றும் பருவ இதழ்கள் சட்டம், பத்திரிகை பதிவுகளை ரத்து செய்வதற்கான அதிகாரத்தை அரசுக்கு தருகிறது. இது பற்றிய விரிவான தலையங்கம் சென்ற ஜனசக்தி இதழில் வெளிவந்தது.

இன்னும் நிறைவேற்றப்பட்டுள்ள, அனுசந்தன் தேசிய ஆய்வு நிறுவனச் சட்டம், மருந்தக திருத்தச் சட்டம், இந்திய மேலாண்மை கல்வி நிறுவன (ஐஐஎம்) சட்டம், கடற்கரை பரப்பு கனிம வள மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தும் திருத்தச் சட்டம், பிறப்பு இறப்பு பதிவு திருத்தச் சட்டம், சுரங்கம் மற்றும் கனிமவள மேம்பாடு ஒழுங்கமைப்பு திருத்தச் சட்டம், தேசிய செவிலியர் துணை செவிலியர் ஆணைய சட்டம், தேசிய பல் மருத்துவ ஆணையச் சட்டம்,ஒளிப்பதிவு திருத்தச் சட்டம், கடலோர மீன் வளர்ப்பு நிறுவன திருத்தச் சட்டம், வனங்கள் (பாதுகாப்பு) திருத்தச் சட்டம், வழக்கறிஞர் திருத்தச் சட்டம் ஆகிய சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

இவை அனைத்தும், கார்ப்பரேட்டுகளின் அழுத்தத்துக்கு உட்பட்டு, சாதாரண மக்களின் நலன்களுக்கு விரோதமாகவும் பெரும் செல்வந்த நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தியாவின் இயற்கை வளங்களையும் கனிம வளங்களையும் கார்ப்பரேட்டுகளுக்கு அள்ளித் தருவது இந்தியர்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள பேச்சுரிமை எழுத்துரிமை, கருத்துரிமையை கட்டுப்படுத்துகிற அல்லது முற்றாக மறுக்கிற வகையில் சட்டங்கள் அமைந்துள்ளன. மக்கள் தீர்ப்பு எழுதுவார்கள்

இந்தச் சட்டங்கள் எல்லாம் தவறான நோக்கத்தோடு திருத்தப்பட்டவை என்ற தீர்ப்பு எழுதும் அதிகாரம் மக்களின் கரங்களில்தான் இருக்கிறது. 2024ல் வரும் வாய்ப்பை மக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள்.

தொடர்புக்கு: 73971 30367

## வினாடி - வினா

1 இந்திய தேசிய காங்கிரஸ் எப்போது, யாரால் தொடங்கப்பட்டது?

2 இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக மகாத்மா காந்தி எப்போது தேர்ந்தெடுக்கப்பட்டார்?

3 பிரிட்டிஷாரால் புனையப்பட்ட கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களின் பெயர்கள் என்ன?



4 இந்தியாவின் முதல் பெண் ஆளுநரின் பெயர் என்ன?

5 லெனின் பிறந்த நகரத்தின் பெயர் என்ன?

6 ஆளும் வர்க்கம் என முதலாளிகள் அழைக்கப்படும் போது, தொழிலாளர்களுக்கு மார்க்ஸ் சூட்டிய பெயர்?

விடைகள் 12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 20

## வெற்றுச் சொற்களாலான வீர வசனங்கள்

நூறாண்டு கால போராட்டத்தின் விளைவாக இந்தியா வென்றெடுத்த விடுதலையின் 77 ஆம் ஆண்டில், தியாகிகள் ஏந்திப் பிடித்த மூவண்ணக் கொடியை, செங்கோட்டை தளத்தில் ஏற்றி வைத்து பிரதமர் மோடி உரையாற்றியிருக்கிறார்.

“எனது குடும்பத்தின் 140 கோடி உறுப்பினர்களும் இன்று விடுதலை திருநாளை கொண்டாடுகிறார்கள்” என்று துவங்கினார். இந்தியர்கள் எல்லோரும் என் சகோதரர்கள் என்று ஒப்பு கொள்கிறாரே என்று முதலில் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் அடுத்த வினாடியே அதை போட்டு உடைத்தார். இனி இந்த நாட்டில் யாரையும் ‘தாஜா’ செய்து வேண்டிய வாழ வேண்டியது இல்லை என்று தொடர்ந்தார். அதாவது இதுவரை இருந்த அரசுகள் முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரை தாஜா செய்து கொண்டிருந்தனவாம். இனி அது தேவையில்லையாம்.

தலைப்பாகை அணிந்து கொண்டு கைகளை தூக்கி வீசி, கேட்டுக் கேட்டு புளித்துப்போன வீர வசனங்களை உதிர்த்தது தான் கடைசியில் எஞ்சியது.

“அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவை பொருளாதாரத்தில் உலகின் முதல் மூன்று இடங்களில் ஒன்றாக மோடி மாற்றுவேன் என உறுதியளிக்கிறேன்” என்பது முதல் வசனம்.

2028ல் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறும் என 2013 ஆம் ஆண்டிலேயே மன்மோகன் சிங் சொல்லி விட்டார்!

அவர் ஆட்சிக்கு வந்த 2014க்கு முன்னால் பொருளாதாரம் உடைந்து கிடந்ததாகவும், இப்போது பெரும் வளர்ச்சி பெற்று விட்டதாகவும் கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் மோடி சொன்னார். அவருக்கு முன் 2004 – 2014ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7.8% ஆகும். இவரது 9ஆண்டுகளில் 5.7% ஆகக் குறைந்து விட்டதுதான் உண்மை.

பிறகு இளைஞர்களுக்கான செய்தியாக “இந்த நாடு உங்களுக்கு வரம்பற்ற வாய்ப்புகளைத் தரும். கவலையே படாதீர்கள்” என்று சொன்னது இன்னும் பெரிய உருட்டு!

அவரது ஆட்சி காலத்தின் கடைசி ஆண்டுகளில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வேலையின்மை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது.

2014 ல் “மேக் இன் இந்தியா” என்று அவர் அழைப்பு கொடுத்த போது உற்பத்தித் துறையில் 10 கோடி வேலை வாய்ப்பு என்றார்கள். ஆனால் ஏற்கனவே வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களில் 15 லட்சம் பேருக்கு வேலை இழப்பு ஏற்பட்டதுதான் மிச்சம்.

அவரது கார்ப்பரேட் ஆதரவு பொருளாதாரக் கொள்கைகளால், சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் இயங்க முடியாமல் மூடப்பட்டு, லட்சக்கணக்கானோரின் வேலை பறிபோனது.

“விலைவாசியையும் பணவீக்கத்தையும் நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருக்கிறோம்“ என்ற அடுத்த வசனம் சிரிப்புக்குரியது.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வு ஆகியவை அனைத்து பொருட்களின் விலைகளையும் உயர்த்தி விட்டன. சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 37% விலை ஏறுகிறது.

இவரது ஆட்சியில் பெண்களின் நிலை உயர்ந்து இருக்கிறதாம். கூட்டு பாலியல் வன்முறைக்கு ஆளான கத்துவா சிறுமி முதல், மல்யுத்த வீராங்கனைகள், மணிப்பூர் பெண்கள் வரை நடந்த பாலியல் வெறியாட்டம் மனக்கண்ணில் ஓடுகிறது. அந்தப் பாவிகளை பாதுகாக்க தேசியக்கொடியை ஏந்தி சங்கி கும்பல் ஆர்ப்பாட்டம் செய்த அவலமும் நினைவுக்கு வருகிறது.

“மாநில எதிர்பார்ப்புகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவின் எந்தப் பகுதியும் பின்தங்கியிருக்கக் கூடாது” என்பது அடுத்த வசனம். மாநில உரிமைகளை எல்லாம் பறித்து மையத்தில் அதிகாரத்தை குவிக்கிறார். தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்தியையும் நீட்டையும் திணிக்கிறார். காஷ்மீர், மணிப்பூர், அரியானா. டெல்லி என வரிசையாக அழிக்கிறார். சொல் ஒன்று, செயல் வேறு!

“அடுத்த விடுதலை திருநாளில், இதே செங்கோட்டைத் தளத்திலிருந்து, நாட்டின் மேம்பாட்டையும் சாதனைகளையும் எடுத்துச் சொல்வேன்” என்றதன் மூலம், வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறப் போவதாக தன் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இந்தப் பத்தாண்டுகளில் வேதனைகளை மட்டுமே தந்த இவர், அதானியையும், அம்பானியையும் உலகத்தின் பெரும் பணக்காரர்களாக மாற்றியதை வேண்டுமானால் சாதனை என்று சொல்லிக் கொள்ளலாம்.

கடைசியாக சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களுடைய கனவை நிறைவேற்றுவோம் என சபதமேற்றார். பாவம்! அந்த பல லட்சக்கணக்கான தியாகிகள் வரிசையில், அவரது இயக்கத்தைச் சேர்ந்த ஒற்றை ஆள் கூட இல்லை!

அடுத்த ஆகஸ்ட் 15 ல், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்களைச் சார்ந்தவரின் கரங்களால் தாயின் மணிக்கொடி ஏற்றப்படட்டும்!

# இந்திய கிரிக்கெட் வாரியம் தொண்டு அறக்கட்டளையா?

**உலகில் உள்ள விளையாட்டு வாரியங்களில் இரண்டாவது வசதி படைத்த வாரியம் இந்திய கிரிக்கெட் வாரியமாகும் (BCCI).**



கே.முருகன்

இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால்? விளையாட்டை மேம் படுத்துகிறோம் என்று கூறி கொண்டு தொண்டு அறக்கட்டளை என 1996ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு அரசிடமிருந்து வரிச்சலுகையைப் பெற்று வருகின்றது.

தவறான நோக்கத்தில் அரசின் சில சட்டங்களில் உள்ள ஓட்டைகளைப் பயன் படுத்தி, வரி செலுத்தாமல் ஏமாற்றி வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் தொடக்கம் முதல் தற்போது வரை அரசியல் செல்வாக்கு பெற்றவர்கள் வாரியப் பொறுப்பில் இருந்து வருவதேயாகும்.

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களுக்கு சாதகமாக சட்டவிதிகளை மாற்றுவதும் தொடர்கின்றது. மக்கள் வரிப்பணம் மோசமாக சுரண்டப்படுகின்றது.

கிரிக்கெட் வீரர்கள் ஏலம், தொலைக்காட்சி ஊடகங்கள் விளம்பர உரிமைகள் வழங்குவது போன்றவைகள் கிரிக்கெட் வாரியத்தின் பிரதான பணிகளாக உள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் வாரியம் 2023–27 காலத்திற்கு IPL ஊடக உரிமைகள் ஏலம் நடத்தி மிகப்பெரிய அளவிற்கு ரூபாய் 48,396 கோடி (6.2. பில்லியன் டாலர்) உத்தரவாதம் பெற்றது. இந்த தொகை முந்தைய ஏல சுழற்சி முறையோடு ஒப்பிடும் போது மூன்று மடங்குகள் கூடுதலாகும்.

குழந்தை பருவம் முதல் விடலைப் பருவம் எட்டும் வரையில் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் வாழ்க்கை மேம்பாடுகளுக்கு சாத்தியமான வகையில் உதவிகள் செய்வதற்கு உலகத்தில் சுமார் 190 நாடுகளில் செயல்பட்டு வரும் தொண்டு அறக்கட்டளையான யுனிசெப் கடந்த 2021 ஆம் ஆண்டில் பெற்றுள்ள உதவிகள் 8100 கோடிகள். இதில் 5900 கோடி அரசுப் பொது துறை நிறுவனங்கள் மற்றும் அரசுகளுக்கு இடையில் செயல் பாட்டில் இருக்கும் அரசு உதவி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட நிதி உதவிகளாகும்.

இந்திய கிரிக்கெட் வாரியம் 202327 வரையிலான காலங்களுக்கு பெறும் பணம் பல மடங்குகள் கூடுதலாகும். தொண்டு அறக்கட்டளை என பதிவு செய்து கொண்டு அரசின் வரிச் சலுகைகள் பெற்று வரும் இந்திய கிரிக்கெட் வாரியம் மூலம் ஏழைகளும், ஏழைக்குழந்தைகளும் எத்தனைப் பேர் எப்படிப்பட்ட உதவிகள் பெறுகின்றனர் என்பதுதான் அதிசயமானதாகும்.

குஜராத் கிரிக்கெட் வாரியம் மற்றும் வருமான வரித்துறை இயக்குநர் குஜராத் இடையே நடந்த வழக்கில் 2019 செப்டம்பர் 27ஆம் தேதி இந்திய கிரிக்கெட் வாரியத்தின் நடவடிக்கை சட்டத்தின் பார்வையில் வணிக நோக்கம் கொண்டது என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை என வெளிப்படையாகவே குஜராத் உயர்நீதிமன்றம் கருத்தை பதிவு செய்தது.

சற்று பின்னோக்கி பார்த்தால் 2007ல் IPL போட்டி அறிவித்தநிலையில் கிரிக்கெட் வாரிய பொறுப்பில் இருந்த லலித் மோடி வரி தொடர்பான பிரச்சனைகளில் நடந்து கொண்டவிதமும், 2018ல் உள்துறை அமைச்சர் அமித்ஷா மகன் ஜெய்ஷா கிரிக்கெட் வாரியத்தின் நிதி மற்றும் சந்தைப்படுத்துதல் குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து செயலாளராக பொறுப்பேற்ற போது, கிரிக்கெட் வாரியம் தொண்டு அறக்கட்டளை போர்வையில் வருமான வரித்துறை மேல் முறையீடு தீர்ப்பாயத்தில் திருத்தங்கள் வரிவிலக்கு பெறுவதற்கு அரசியல் செல்வாக்கு செலுத்தப் பட்டது.

சமுக தொண்டில் உண்மையாக ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு வரிச்சலுகை கொடுக்கப்பட்டால் பல கோடி ஏழைகள் பயன் பெறுவார்கள். இவை குறித்து முதலாளித்துவ கொள்கையாளர்கள் கேள்வி எழுப்ப மாட்டார்கள்.

இந்தியாவில் கோடிக்கணக்கான ஏழைகள் வீட்டில் குடிப்பதற்கு நல்ல குடிநீர் இல்லை, மலை கிராமங்களில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு மருத்துவ மனைகள் இல்லை. உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பவர்களை கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் வசதிகள் இல்லை. பிள்ளைகள் படிப்பதற்கு பள்ளிகள் இல்லை, சரியான கட்டிடங்கள் இல்லை. 75ஆம் ஆண்டு சுதந்திர பெருவிழா கொண்டாடும் நிலையில் மரணமடைந்தவர்களை எரிப்பதற்கும், புதைப்பதற்கும் சுடுகாடு, இடுகாடுகள் இல்லை. சுடுகாட்டுக்கு செல்வதற்கு பாதை இல்லை.

பொதுத்துறை நிறுவனங்கள் சாலை, குடிநீர் வசதிகள் உள்ளிட்ட மேம்பாட்டு திட்டங்களை கிராமத்தில் மேற்கொள்வதற்கு சமுக பொறுப்புணர்வு திட்டத்தில் (CSR) நிதி உதவிகள் செய்து வருகின்றன. மேலும் சில சிறிய தனியார் நிறுவனங்களும் CSR நிதி மூலம் உதவிகள் செய்து வரும் நிலையில், எந்தவித சமுக தொண்டிலும் ஈடுபடாமல் தொண்டு அறக்கட்டளை என பதிவு செய்து கொண்டு அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டத்தின் ஓட்டைகள் மூலம் வரிச் சலுகைகள் பெற்று வரும் இந்திய கிரிக்கெட் வாரியம் 2018ல் தொண்டு அறக்கட்டளை என பதிவை மீண்டும் புதுப்பிக்க செய்த முயற்சியின் போது வணிக நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய கிரிக்கெட் வாரியம் தொண்டு அறக்கட்டளையாக பதிவு செய்து கொள்ள முடியாது என்று வருமான வரித்துறை கேள்வி எழுப்பியதில் எரிச்சலடைந்த வாரிய நிர்வாகிகள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தினர்.

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் உண்மையான தொண்டு விளையாட்டு அமைப்புகளில் கோடீஸ்வரர்களை உருவாக்குவதேயாகும். இவைகளை முதலாளித்துவ ஊடகங்கள் கேள்வி எழுப்பாது. தங்களது தொலை காட்சிகளில் விவாதம் நடத்த மாட்டார்கள். காரணம் கிரிக்கெட் விளையாட்டின் நேரடி ஒளிபரப்பு உரிமை மூலம் கிடைக்கும் பல நூறு கோடி ரூபாய் வருவாயை இழக்க விரும்ப மாட்டார்கள். முதலாளித்துவ கொள்கையாளர்கள் இவைகள் குறித்து கேள்வி எழுப்ப மாட்டார்கள். இதுவே முதலாளித்துவ சந்தை வியாபாரத்தின் உண்மையான முகத்தோற்றம்.

இவைகளை மக்கள், குறிப்பாக இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடர்புக்கு: செல்: 7603930397

# பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடும் நிர்மலா சீதாராமன்!



இளசை கணேசன்

**இரண்டு விலங்குகள் மோதிக்கொண்டால், ரத்தம் குடிக்க நாக்கை தொங்க போட்டு காத்திருக்குமாம் ஓநாய்! ஆனால், இந்த ஓநாய்கள் சண்டையை தூண்டி விடாது! பாசிச ஓநாய் இருதரப்புக்கும் இடையே சண்டையை மூட்டி, மேலும் தூண்டி விட்டு ரத்தம் குடிக்க தயாராக இருக்கும்.**

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் போது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் பேச்சு இதற்கு முற்றிலும் பொருந்தும்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கத் துடிக்கிறார்!

1. திமுகவுக்கும் அதிமுகவுக்கும் மோதலை ஏற்படுத்துவது!
2. திராவிடத்திற்கும், தமிழ் தேசியத்திற்கும் மோதலை ஏற்படுத்துவது.

1989ல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடந்த சம்பவத்தை சுட்டிக்காட்டி, அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதாவை திரௌபதியாகவும் திமுக அமைச்சர்களை துச்சாதனர்களாகவும் சித்தரிக்கிறார் நிர்மலா சீதாராமன்.

"ஜெயலலிதா அவர்கள் திரௌபதியும் அல்ல.. துச்சாதனர்களால் துகில் உரியப் படவும் இல்லை." என அன்றைக்கு ஜெயலலிதாவுக்கு அரணாக இருந்த திருநாவுக்கரசரும், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனும் உண்மையை போட்டு உடைத்து இருக்கிறார்கள்.

கோயபல்ஸ் நிர்மலா சீதாராமனுக்கு கொஞ்சமாவது உரைக்கவில்லையா?

நடக்காத ஜெயலலிதா சம்பவத்திற்கும்; நடந்து கொண்டிருக்கும் மணிப்பூர் வன்முறை பாலியல் கொடுமைக்கும் என்ன சம்பந்தம்?

ஒன்றாவது படிக்கும் பிள்ளை கூட இந்த ஒப்பீட்டை ஏற்குமா? நிர்மலா சீதாராமன் அவர்களே மக்கள் மன்றத்தில் பதில் சொல்லுங்கள்!

- தமிழர்கள் திராவிடர்கள் இல்லையாம்!
- தமிழகம் திராவிடம் அல்லவாம்!
- தமிழ்நாட்டு அந்தணர்கள் ஆரியர்கள் இல்லையாம்! அந்தணர்களும் தமிழர்களாம்!
- ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் இருப்பது பகைமை அல்லவாம்! சிறிய அளவுக்கு வேற்றுமை மட்டும்தானாம்!

என்று தமிழக மக்களிடம் கயிறு திரித்திருக்கிறார் நிர்மலா சீதாராமன்.

இதில் இன்னொரு முக்கிய சூழ்ச்சியும் இருக்கிறது! எங்கும் சூழ்ச்சி, எதிலும் சூழ்ச்சி என்பதுதானே பார்ப்பனியம்!

அந்தணர்களின் சிறப்புகளை ஒட்டுமொத்தமாக அபகரித்து அந்தணர்களை பார்ப்பனர்களாகவும், தமிழர்களாகவும் சித்தரிக்க நிர்மலா சீதாராமன் முயற்சிக்கிறார்!

இந்தக் கருத்துக்கள் சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டு இருப்பதாக ம.பொ.சி. யை துணைக்கு அழைக்கிறார்!




ம.பொ.சி. அவர்களே கூட திராவிடத்தில் சங்கமமாகி சட்டமன்றத்தில் மேலவை உறுப்பினராக ஆகிவிட்டாரே?

'நாம் தமிழர்' என்ற கட்சியை தமிழ்நாட்டில் முதலில் தொடங்கிய ஆதித்தனார் அவர்களே கூட திராவிடக் கட்சியில் சங்கமமாகி அமைச்சராகி விட்டாரே!

ம. பொ. சி. யின், திராவிட எதிர்ப்பை தனக்கு சாதகமாகக் காட்டத் தெரிந்த நிர்மலா சீதாராமனுக்கு அறிஞர் அண்ணாவின் 'ஆரிய மாயை' பற்றி தெரியாதா? அண்ணாவின் 'ஆரிய மாயை' யில் இருந்து எடுத்துக்காட்டத் தொடங்கினால்ஞ் அவர் தலைதெறிக்க ஓட வேண்டி இருக்கும்!

குறைந்தபட்சம் கலைஞர் கருணாநிதியும், அம்மா ஜெயலலிதாவும் திராவிட கட்சிகளின் தலைவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியும் தற்போதைய திராவிட கட்சிகளின் தலைவர்கள் என்ற புரிதலாவது உண்டா?



நிர்மலா சீதாராமன் அவர்களே, சிலப்பதிகாரம் யாருடைய படைப்பிலக்கியம் என்பது தெரியுமா?

சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. இது சமணர்களின் படைப்பிலக்கியம்! 'அன்பே சிவம்' என்று போதித்துக்கொண்டு 8000 சமணர்களை கழுவில் ஏற்றி துடிக்கத் துடிக்க கொன்று குவித்தார்களே! அந்த சமணர்களின் படைப்புதான் சிலப்பதிகாரம்!

ஆரிய எதிர்ப்புதானே சமணத்தின் அடிப்படை!

சிலப்பதிகாரத்தின் உள்ளடக்கம் குறித்து மக்கள் மன்றத்தில் விவாதிக்கத் தயாரா?

சங்க காலத்தில், சங்க இலக்கியத்தில், வேதங்களில், வேத இலக்கியத்தில், இதிகாசங்களில், புராணங்களில் 'இந்து ' என்ற சொல் எங்காவது இருக்கிறதா?

சமஸ்கிருத இலக்கியங்களில் எங்காவது 'மதம்' என்ற சொல் இருக்கிறதா?

இரண்டையும் சேர்த்து 'இந்து மதம்' என்று மூச்சுக்கு 300 தரம் கூப்பாடு போடுகின்றீர்களே ஏன்? பார்ப்பனர்களின் பாதுகாப்பு, பார்ப்பனர்களின் புகலிடம் இந்து மதம் என்பதில் தானே?

ஆரியர் திராவிடர் இடையே இருப்பது முரண்பாடு!

ஆரியர் தமிழர் இடையே இருப்பதும் முரண்பாடு தான்!

திராவிடர் தமிழர் இடையே இருப்பது முரண்பாடு அல்ல நேச வேற்றுமை!

இந்த யதார்த்த உண்மையை அப்படியே புரட்டி போடுகிறீர்களே! தமிழக மக்களை ஏமாற்ற முடியுமா? ஒரு காலமும் முடியாது!

அந்தணர் என்போர் அறநெறியை பின்பற்றுபவர். ஆசைகளைத் துறந்தவர். ஒழுக்கத்தை கடைப்பிடிப்பவர்.

வேதங்களை கற்றுத் தேர்ந்தவர்கள் மட்டுமல்ல, சிரா மணம் என்று சொல்லக்கூடிய வேத எதிர்ப்பாளர்களில் கூட அந்தணர்கள் இருந்திருக்கிறார்கள்.

அரசு உருவாக்கத்தின் போது அரசுக்கு அறிவுரை வழங்குவதும் மெய்யியல் துறையில் ஈடுபாடு காட்டுவதும் அந்தணர்களுக்கு உரியதாக இருந்தது.

அந்தணர்கள் என்பது தொழில் பெயர் அல்ல! ஒரு சாதிப் பெயரும் அல்ல.. அது பண்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறப்புப் பெயர்.

உதாரணத்திற்கு ஒன்று. 'பதிற்றுப்பத்து' தொகை நூலில் இரண்டாம் பதிகம் பாடிய குமட்டூர் கண்ணன் என்பவர் ஒரு அந்தணர்.

இவர் சேர மன்னன் இமயவர்மன் நெடுஞ் சேரலாதன் அவையில் அரசருக்கு ஆலோசனை கூறுபவராக இருந்தார். இமயம் வரை படையெடுத்து ஆரிய மன்னர்களை வெற்றி கொண்டதில் குமட்டூர் கண்ணனின் ஆலோசனை வழிகாட்டுதல் முக்கியத்துவம் வாய்ந்தது.

அந்தணர் யார் என்பதை ஐயன் திருவள்ளுவர் அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

**"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிருக்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்"**

அறநெறியில் சிறந்து விளங்குவதோடு மற்ற உயிர்களிடத்தும் அருள்நெறி காட்டி நடக்க வேண்டும் என்று திருக்குறள் விளக்குகிறது.

பார்ப்பனர்களிலும் அந்தணர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் பார்ப்பனர்கள் மட்டுமே அந்தணர்கள் என்பது வடிகட்டிய பொய்.

தமிழர்கள் உருவாக்கி வைத்துள்ள அடிப்படை மரபுகள் குறித்து நிர்மலா சீதாராமனுக்கு தெரியுமா?

- அனுபவம் மற்றும் அறிவியல் முறையில் அறியும் அறிவு.
- அன்பு நிறைந்த சமத்துவ அற வாழ்க்கை.
- அநீதிக்கு எதிராக வீரச்சமர்.
- ஒழுக்கம் மிகுந்த காதல்

இவற்றின் மீது தான் தமிழர்களின் பெருமிதம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

இது பாசிச பாஜகவினருக்கு தெரியாத ஒன்றல்ல. தமிழ் தேசியர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டிய ஒன்றாகும்.

இந்து மதம் என்ற பெரும்பான்மையை உருவாக்கி அதில் பாதுகாப்பாக ஒளிந்து கொண்டவர்கள்.

பெரும்பான்மையினரின் வாக்குகளைப் பெறுவதற்காக சிறுபான்மையினருக்கு எதிராக எதையும் செய்ய துணிபவர்கள்.

இவைதான் பாசிச பாஜகவின் தேர்தல் அரசியல் உத்தி. இந்த உத்தியின் விளைவுதான் மணிப்பூரில் சிறுபான்மை யினரான கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறையாக பாலியல் கொடுமை!

மணிப்பூர் வன்முறை திசை திருப்ப ஹரியானாவில் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறை.

பாசிச பாஜகவின் நரித் தந்திர உத்தி வட இந்தியாவில் சில பகுதிகளில் எடுபடலாம். தமிழ்நாட்டில் நிச்சயமாக எடுபடாது.

இதிலிருந்து தமிழ்நாட்டு அரசியலை திசைதிருப்பவே பிரதமர் மோடியும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது படாத பாடு பட்டு இருக்கிறார்கள்.

நிர்மலா சீதாராமனின் பொய் மூட்டைகளுக்கு பதில் கூறுவதுடன் நாம் திசைதிரும்பி விடக்கூடாது.

நமது குறி பாசிச பாஜகவை வீழ்த்துவது; ஆட்சியில் இருந்து வெளியேற்றுவது என்பதாக இருக்க வேண்டும்.

தொடர்புக்கு: 8220468816

## பிரதமர் மோடி நவீன திருதராஷ்டிரன்!

விஸ்வ குருவின் ஆட்சியில் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். அவர்களை யார் காப்பாற்றுவார்கள்? திரௌபதி துன்புறுத்த பட்டபோது, மன்னன் திருதராஷ்டிரன் பார்வையாளராக அமர்ந்திருந்தார். அதை தடுப்பதற்கு எதுவும் செய்யவில்லை!?

அதேபோன்று இன்று மணிப்பூரில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு பெண்கள் பாலியல் கொடுமைக்கு ஆளான நிலையில் அதன் பார்வையாளராக, நவீன திருதராஷ்டிரனாக மோடி இருக்கிறார். பாலியல் கொடுமைகளை தடுப்பதற்கு அவர் எதுவும் செய்யவில்லை.

இதற்காக அவர் வெட்கப்பட வேண்டும். என்று சிவ சேனா தலைவர் தாக்கரே மோடியை கடுமையாகச் சாடியுள்ளார்.

இதே சம்பவத்தை நாடாளுமன்றத்தில் கனிமொழி குறிப்பிட்டு பேசியபோது குறுக்கிட்ட நிர்மலா சீதாராமன், தாக்கரேவின் விமர்சனத்திற்கு பதில் கூறுவாரா?

10 ம் பக்கத் தொடர்ச்சி

சொத்துக்கள் அனைத்தையும் விற்று, மக்கள் ஒற்றுமையை சீர்குலைத்து வருகிற பாஜகவை ஆட்சியை விட்டு வெளியேற்றுவதே இந்திய மக்களின் முதல் கடமையாகிறது.

விலைவாசி உயர்வுக்கு காரணமான, வேலையின்மையை அதிகரித்த, மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கிற, இந்தியைத் திணித்து தமிழைப் பழிக்கிற, சொந்த லாபங்களுக்காக நாட்டை நாசமாக்குகிற பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு! என முழங்கி, செப்டம்பர் 12, 13, 14 ஆகிய தேதிகளில், ஒன்றிய அரசு அலுவலகங்களின் முன்பு, தமிழ்நாடு முழுவதும் தொடர் மறியல் போராட்டத்தை நடத்துவதென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு முடிவு செய்கிறது.

**தீர்மானம் : 2**

**காவிரி நீர் பகிர மறுக்கும் கர்நாடக அரசுக்கு கண்டனம் உச்சநீதிமன்றத்தில் உடனே முறையிடுக!**

உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பின்படி, ஜூன் முதல் ஆகஸ்ட் 10 வரை கர்நாடகம் தமிழகத்திற்கு திறந்து விட வேண்டிய 38 டி.எம்.சி. நீர் நிலுவையில் உள்ளது.

அதை தமிழ்நாட்டுக்குத் திறந்துவிட வாய்ப்பில்லை என 11.8.2023 அன்று டெல்லியில் நடந்த காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் கர்நாடக அரசு கூறியிருப்பது கண்டனத்துக்கு உரியதாகும். இது இந்திய அரசியல் சட்டநெறிமுறைகளை மீறுகிற செயலாகும்.

கர்நாடக அணைகளின் மொத்தக் கொள்ளளவில் சுமார் 80% தண்ணீர் இருப்பில் இருந்தும் திறந்துவிட மறுத்துள்ளது. மேட்டூர் அணையின் நீர் இருப்பைகொண்டு சில நாட்களுக்குதான் தண்ணீர் திறக்கமுடியும். கர்நாடகத்தில் தென்மேற்கு பருவ மழை மூலம் ஆகஸ்ட் இறுதியில் பெருமளவு நீர் கிடைக்கும் என வானிலை ஆய்வு கூறுகிறது.

மேட்டூர் அணை நீரை எதிர்பார்த்து, காவிரிப் படுகையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது தண்ணீரின்றி, அந்தப் பயிர்கள் காய்ந்து கருகுகின்றன. தண்ணீர் தேவைப்படும் நேரத்தில், தீர்ப்பின் அடிப்படையில் தண்ணீர் தர மறுப்பது நியாயமற்றதாகும்.

முதல் நாள் நடந்த கண்காணிப்பு குழு கூட்டத்தில் 25 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட ஒப்புதல் அளித்த கர்நாடக அரசின் நீர்வளத்துறை உயர் அலுவலர்கள், மறுநாள் நடந்த காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் இதை ஒப்புக்கொள்ள மறுத்தனர். வேறுவழியின்றி தமிழ்நாடு அரசு அதிகாரிகள் வெளியேறி உள்ளனர். பின்னர் 15 நாட்களில் 8 டி.எம்.சி.



மட்டும் தண்ணீர் திறக்கப்படும் என்று முதல் நாள் முடிவை மாற்றி ஆணைய கூட்டத்தில் கர்நாடக அலுவலர்கள் கூறியுள்ளனர். 38 டிஎம்சிக்கு பதிலாக 8 டிஎம்சி தருவது தமிழ்நாட்டின் விவசாயத்துக்கு உதவாது. தண்ணீர் தரப்பட்டது போன்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்தவே கர்நாடக அரசு முயல்கிறது கர்நாடக முதல்வரும் தமிழகத்திற்குத் தண்ணீர் தர வாய்ப்பில்லை என நேற்று உறுதியாகக் கூறியிருக்கிறார்.

பற்றாக்குறை நேரத்தில், மாநிலங்களுக்கு இடையே தண்ணீர் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்ற கோட்பாட்டையே மறுத்து, தண்ணீரை இதற்கு மேலும் தேக்கினால் ஆபத்து எனும் நிலையில் தமிழ்நாட்டை வடிகாலாக மட்டுமே கர்நாடக அரசு கருதுகிறது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசிடம் அறிவுறுத்த வேண்டிய ஒன்றிய அரசு, பாஜக அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்கள் மோதிக் கொள்ளட்டும் என வேடிக்கை பார்ப்பது அதன் கடமையிலிருந்து தவறும் நெறியற்ற போக்காகும். இது இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிரானதாகும்.

கர்நாடகம் தண்ணீர் கொடுக்கவில்லை எனில் குறுவை மட்டும் அல்ல, சம்பா, தாளடி சாகுபடிக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே தமிழ்நாடு அரசு உடனடியாக உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்து, உரிய அளவு தண்ணீரைப் பெறுவதற்கான அவசர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மாநில அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டம் வலியுறுத்துகிறது.

பயிர் அழிவால் பாதிக்கப்படும் குறுவை விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 35 ஆயிரம் ரூபாய் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் பயிர்க் காப்பீட்டு திட்டத்தை மாநில அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம்: 3**

**நீட் விலக்கு மசோதாவை அனுமதிக்க மாட்டேன் என ஆணவத்தோடு கூறிய ஆளுநருக்கு கண்டனம்.**

ஆளுநர் மாளிகையில் கடந்த 12.08.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், நீட் தொடர்பாக, மாணவர் ஒருவரின் தந்தை எழுப்பிய கேள்விக்கு, ஆளுநர் ஆர்.என்.ரவி அளித்த பதில் கடும் கண்டனத்திற்குரியது.

"முடிவெடுக்கக் கூடிய இடத்தில் நான் இருந்தால் நீட் விலக்கு மசோதாவிற்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்கமாட்டேன்'' என ஆளுநர் ஆர்.என்.ரவி கூறியுள்ளார். இது அரசியல் சட்டத்திற்கும், மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கும் எதிரானதாகும். தமிழ்நாடு சட்டமன்றத்தை இழிவுபடுத்தும் போக்காகும்.

நீட் குறித்தும் ஆளுநர் தவறான கருத்துக்களை கூறியுள்ளார். மருத்துவக் கல்வி வணிகத்தை நீட் தடுத்துவிட்டது என ஆளுநர் சொல்கிறார். உண்மையில், மருத்துவக் கல்வி வணிகமயமாவதற்கு காரணம் ஒன்றிய அரசின் தனியார் மயமாக்கல் மற்றும் வணிக மயமாக்கல் கொள்கைகள்தான். ஆளுநர் கூறியுள்ளது போல், ``மருத்துவக் கல்வியில் நடைபெற்ற ரூபாய் 1000 கோடி வணிகத்தை' நீட் தடுத்துவிடவில்லை. மாறாக ஒன்றிய அரசின் கொள்கைகளால், மருத்துவக் கல்வி வணிகம் தற்போது பல ஆயிரம் கோடியாக அதிகரித்துவிட்டது.

நீட்டால் முறைகேடுகள் குறைந்துள்ளது என்ற ஆளுநர் கூறுவதும் உண்மையல்ல. மிகப்பெரும் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் மாப்அப் கவுன்சிலிங், ஸ்ட்ரே கவுன்சிலிங்கை ஒன்றிய அரசு அனுமதித்தது. இது தனியார் மருத்துவ நிறுவனங்களின் கட்டணக் கொள்ளைக்கு உதவுகிறது. தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கு சாதகமாக, மாணவர் சேர்க்கை கலந்தாய்வை ஒன்றிய அரசு நடத்துகிறது. அவற்றின் இடங்கள் நிரம்ப வேண்டும் என்பதற்காகவே நீட் கட்ஆப் மதிப்பெண்ணும் ஒவ்வொரு ஆண்டும் குறைக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டாக நீட் தேர்வால் தற்கொலைகள் நடைபெறவில்லை என ஆளுநர் கூறுவதும் உண்மையல்ல. நடப்பாண்டில் மட்டுமே, நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கு பயிற்சி பெற்ற 20 மாணவர்கள், ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் மட்டும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சென்னை குரோம்பேட்டையை சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்ற மாணவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

`நீட் பயிற்சி மையங்கள் அவசியமில்லை. ஆசிரியர்கள் முறையாக கற்பித்தாலே போதும் . பயிற்சி மையங்களில் படிக்க வேண்டும் என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது'' என ஆளுநர் கூறியுள்ளார்.

தனியார் பயிற்சி மையங்களிலோ அல்லது சிறந்த தனியார் உறைவிடப் பள்ளிகளிலோ பயிற்சி பெற்றவர்கள்தான், அதிக மதிப்பெண்ணுடன் நீட்டில் வெற்றி பெற முடிகிறது. மருத்துவக் கல்லூரிகளிலும் அதிக அளவில் சேர முடிகிறது. எனவே, ஆளுநரின் இக்கருத்தும் தவறானதாகும்.

அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடே 600 அரசுப்பள்ளி மாணவர்கள் மருத்துவக் கல்வியில் சேர உதவியுள்ளது என ஆளுநர் கூறுகிறார். ஆனால் இந்த அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கும் எதிராகவே ஒன்றிய அரசு இருந்துள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு தகுதி மற்றும் திறமைக்கு எதிராக அமைந்துவிடும் என ஒன்றிய அரசின் வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதாடினார் என்பதை ஆளுநர் மறந்துவிட்டார் போலும்.

ஏழைகள் மருத்துவக் கல்லூரிகளில் சேர நீட் உதவியுள்ளது என்ற ஆளுநரின் வாதமும் தவறானது. சிறந்த பயிற்சி மையங்களில் படிக்கும் வசதியுள்ளோருக்கானதாக மருத்துவக் கல்வியை, நீட் மாற்றிவிட்டதென்பதே உண்மை.

எனவே, வேண்டுமென்றே உண்மைக்கு மாறான கருத்துக்களை முன்வைத்து, நீட் விலக்கை அனுமதிக்க முடியாது என ஆளுநர் ஆணவப்போக்கோடு கூறியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு மாநில அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிராக செயல்படும் ஆளுநர் ஆர்.என். ரவியை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

தமிழ்நாடு சட்டப்பேரவை இரண்டு முறை நிறைவேற்றி அனுப்பியுள்ள நீட் விலக்கு மசோதாவுக்கு, காலதாமதமின்றி மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் ஒப்புதல் பெற்றுத் தருமாறு ஒன்றிய அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம்: 4**

**அவலநிலை ஊதியம் பெறுவோரிடம் தொழில் வரி வசூலிப்பதைக் கைவிடுக!**

தமிழ்நாடு அரசின் தொழில் வரி சட்டம் 1998 (Tax on Professional Trades Calling and Employment Act) என்பது, தொழில் நடத்துவோர், வணிகம் செய்வோர், தொழிலில் பணிபுரிவோர் ஆகியோரிடம் வரி வசூலிப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம் என்றாலும், முழுக்க முழுக்க தொழிலாளரிடமிருந்து மட்டுமே வரி வசூலிக்கப்படுகிறது.

ஆறு மாதத்தில் ரூ.21,000 க்கு மேல், அதாவது மாதம் ரூ.3500 க்கு மேல் வருவாய் ஈட்டும் தொழிலாளர்களிடமிருந்து வரி வசூலிக்க இது வகை செய்கிறது. மிக, மிகக் குறைந்த ஊதியம் பெறும் கிராம ஊராட்சி, தூய்மைப் பணியாளர், தொகுப்பூதிய, தினக்கூலி தொழிலாளரிடம் வரி வசூலிக்கப்படுகிறது.

குறைந்தபட்ச ஊதியம் என்பது அத்தியாவசிய பொருட்களை மட்டுமே வாங்கி வாழ்க்கை நடத்த அவசியமான ஊதியம் ஆகும்.

அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை விட, குறைவான தொகையை ஊதியமாக வழங்குவதும், அதிலிருந்தும் வரி வசூல் செய்வதும் எந்த விதத்திலும் நியாயமானது அல்ல.

தமிழ்நாடு அரசு மகளிர் உரிமைத்தொகை பெறும் பெண்களின் குடும்ப வருமானம் ரூ.2 லட்சத்து 25 ஆயிரத்துக்கு மேற்படக் கூடாது என வரையறுத்துள்ளது. அதாவது மாதம் 18,750 என்பது குறைவான ஊதியம் என்று பொருளாகிறது.

எனவே ரூ.18,750க்கு அதிகமாக மாத ஊதிய பெறுவோரிடமிருந்து மட்டுமே வரி வசூலிக்கும் வகையில் இந்தச் சட்டத்தை பொருத்தமாகத் திருத்துமாறு தமிழ்நாடு அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானங்கள் தொடர்ச்சி அடுத்த இதழில்...**

# கார்ல் மார்க்ஸ் அஞ்சல் தலை வெளியீடு மற்றும் காரல் மார்க்ஸ் மாதிரி உருவச்சிலை திறப்பு விழா




சென்னை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் திடலில் 12.08.2023 அன்று மாமேதை கார்ல் மார்க்ஸ் அஞ்சல் தலை வெளியீடு மற்றும் காரல் மார்க்ஸ் மாதிரி உருவச்சிலை திறப்பு விழா நடைபெற்றது. காரல் மார்க்சின் மாதிரி உருவ சிலையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், தோழர் நல்லகண்ணு திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, மாமேதை காரல் மார்க்ஸ் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு, நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல்.திருமாவளவன், தொ.மு.ச பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் உள்ளிட்ட தலைவர்கள் உரையாற்றினர்.

# பிஞ்சு நெஞ்சில் சாதி வெறி நஞ்சா?

**நெல்லை மாவட்டம் நாங்குநேரி பெருந்தெருவில் வசிக்கக்கூடிய அம்பிகா முனியாண்டி ஆகியோரின் மகன் சின்னதுரை. வள்ளியூரில் உள்ள கன்கார்டியா அரசு மேல் நிலைப்பள்ளியில் பனிரெண்டாம் வகுப்பு படித்து வருகிறார்.**

பட்டியலின சமூகத்தைச் சார்ந்த இம்மாணவனை அதே வகுப்பில் படிக்கக்கூடிய ஆதிக்க சாதியைச் சார்ந்த மாணவர்கள் தொடர்ந்து பல்வேறு வகைகளில் கொடுமை செய்துள்ளனர். அவர்களது புத்தகப் பைகளை சுமக்க வைப்பது, காசு வைத்திருந்தால் பிடுங்கிக் கொள்வது, பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை செய்வது என தொடர்ந்து வன்கொடுமைகளை நிகழ்த்தி வந்துள்ளனர்.

இதனால் வெறுப்புற்ற மாணவன் சின்னத்துரை பள்ளிக்குச் செல்ல வேண்டாம் என முடிவெடுத்து வீட்டிலிருந்துள்ளான். தாயார் அம்பிகா மகனிடம் பள்ளிக்கு ஏன் செல்லவில்லை என கேட்டிருக்கிறார். சக மாணவர்கள் தன்னைப் பல்வேறு வழிகளில் துன்பப்படுத்துவதாக சின்னத்துரை கூறியிருக்கிறார். உடனே சின்னத்துரையின் தாயார் அம்பிகா பள்ளிக்குச் சென்று ஆசிரியர்களிடம் முறையிட்டு இருக்கிறார். ஆசிரியர், சின்னதுரையை மிரட்டிய மாணவர்களை அழைத்து எச்சரிக்கை செய்து அனுப்பியுள்ளார்.

இதனால் கோபமுற்ற ஆதிக்க சாதி மாணவர்கள் 09.08.2023 அன்று மாலை சின்னத்துரை வீடு இருக்கக் கூடிய பெருந்தெருவுக்கு வந்துள்ளனர். ஆட்கள் நடமாட்டம் இருந்த காரணத்தால் மிரட்டி விட்டு சென்று விட்டனர். அன்று இரவு 10 மணிக்கு மேல் சின்னதுரையின் வீட்டிற்குள் நுழைந்து சின்னதுரையை சரமாரியாக வெட்டியுள்ளனர். அரிவாள் வெட்டை தடுக்க முற்பட்ட சின்னதுரைக்கு தலையில் ஒரு வெட்டும், வலது கையில் மூன்று வெட்டும், இடது கையில் இரண்டு வெட்டும், தொடை, பாதம் என பல இடங்களில் பலமான வெட்டுக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. இதை தடுக்க முற்பட்ட அவரது சகோதரிக்கும் வெட்டு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைப்பார்த்த கிருஷ்ணன் என்கிற வயதானவர் மயங்கி விழுந்தார். அவரை நாங்குநேரி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். சின்னதுரையும், அவரது சகோதரியும் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவத்தை கேள்விப்பட்டு 10.09. 2023 சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்ற தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் தென் மண்டல பொறுப்பாளர் பெ. சுகுமார், மாநிலக்குழு உறுப்பினர் எம். லெனின் முருகானந்தம் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள், அந்த ஊர் பொதுமக்கள், குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி, சிகிச்சை பலனின்றி இறந்த கிருஷ்ணனின் உடலை வைத்து போராட்டம் நடத்தினர். அதைத் தொடர்ந்து 3 பேர் முதலில் கைது செய்யப்பட்டனர். சின்னதுரையின் தாயாரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று, குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு சம்பவத்தில் தொடர்புடைய மேலும், 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

10.08.2023 நள்ளிரவுக்குள் சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்ட மூன்று மாணவர்களும் மேலும் அவருக்கு உதவியதாக மூன்று மாணவர்களும் என ஆறு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

09.08.2023 அன்று மாலை சுமார் 5 மணி அளவில் சம்பவத்தில் ஈடுபட்ட, இரண்டாவது குற்றவாளியாக கைது செய்யப்பட்டுள்ள செல்வ ரமேஷின் அண்ணனும், பாட்டியும் சின்னத்துரை வீட்டிற்கு நேரடியாகச் சென்று சின்ன துரையை மிரட்டிச் சென்றுள்ளனர். ஆகவே சம்பவம் நடைபெறுவதற்கு காரணமாக இருந்த அவர்கள் இருவரையும் எஸ்சி/எஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு எஸ்சி/எஸ்டி மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்கள் உடனே வழங்கப்பட வேண்டும்.

இறந்த கிருஷ்ணன் குடும்பத்தில் அவருடைய வாரிசுக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

குற்றவாளிகள் மீது எஸ்சி/எஸ்டி வன்கொடுமை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு எஸ்சி/எஸ்டி ஆணையம் மூலம் நிதியை வழங்க வேண்டும்.

வெட்டுக்காயம் பட்ட சின்னதுரை அவரது சகோதரிக்கு கல்லூரி படிப்பு வரை படிப்பு செலவை அரசே ஏற்று படிக்க வைக்க வேண்டும்.

நெல்லை, தென்காசி உள்ளடக்கிய ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் கல்வி நிலையங்களில் உடற்கல்வி ஆசிரியர் தலைமையின் கீழ் மாணவர்களை கண்காணிக்க கண்காணிப்பு குழு 2017ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. கல்வி நிலையங்களில் நடக்கும் பிரச்சனைகளை கண்காணித்து அதனை சரி செய்ய வேண்டிய பொறுப்பு அக்கண்காணிப்பு குழுவுக்கு உள்ளது. செயல்படாத குழுக்களை விசாரிக்க வேண்டும்.

கல்வி இச்சமூகத்தை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். இங்கே கல்வி நிலையங்களில் கல்வியை கற்பிக்கும் சில ஆசிரியர்களும் சாதிய பாகுபாட்டோடு நடந்து கொள்கிறார்கள், படிக்கும் மாணவர்களும் சாதிய பாகுபாட்டோடு நடந்து கொள்கிறார்கள். 12ம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடம் கொடூரமான செயல்களை செய்யும் அளவிற்கு சாதி உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தி மேலோங்கி இருக்கிறது. இதற்கு சில பெற்றோர்களும் காரணமாக இருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு உரிய கவனத்தை செலுத்தி இம்மாதிரியான சம்பவங்கள் மேலும் நடக்காமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நாங்குநேரி, திசையன்விளை பகுதிகளில் தொடர்ந்து நிலவும் பதட்டத்தை தணிக்க கூடிய வகையில் அனைத்து சமூக மக்களிடமும் இணக்கத்தை ஏற்படுத்தும் முறையில், அரசு நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் நெல்லை மாவட்டக்குழுவின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

– பெ.சுகுமாரன்



> “இங்கே கல்வி நிலையங்களில் கல்வியை கற்பிக்கும் சில ஆசிரியர்களும், படிக்கும் மாணவர்களும் சாதிய பாகுபாட்டோடு நடந்து கொள்கிறார்கள். 12ம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடம் கொடூரமான செயல்களை செய்யும் அளவிற்கு சாதி உளவியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்திஇருக்கிறது. இதற்கு சில பெற்றோர்களும் காரணமாக இருக்கிறார்கள்.”

## நாங்குநேரியில் சாலை மறியல்!

காவல்துறைக்கு தகவல் தெரிவித்தும் வந்து சேராத நிலையில் இருவரின் உயிரையும் காப்பாற்ற இரவு 10 மணிக்கு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டனர்.

இதன் தொடர்ச்சியாக உறவினர்களும் ஊர்க்காரர்களும் நாங்குநேரியில் சாலை மறியலில் ஈடுபட்டனர். நாங்குநேரி காவல்துறையினர் பின்னரே தலையிட்டுள்ளனர். உடனடியாக தலையிட்டிருந்தால் ஒரு உயிரிழப்பு ஏற்பட்டிருக்காது.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் தாத்தா 60 வயதான கிருஷ்ணன் போராட்ட களத்தில் மயக்கம் அடைந்து நாங்குநேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டவர் மரணம் அடைந்து விட்டார்.

# நாங்குநேரி சாதி வெறி: இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

**நாங்குநேரியில் தொடரும் சாதி வெறி இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு..

நாங்குநேரி காவல் நிலையம் அருகில் உள்ள பெருந்தெருவில் பிளஸ் டு பயிலும் பள்ளி மாணவர் சின்னதுரை சாதி வெறியர்களால் வீடுபுகுந்து வெட்டப்பட்டுள்ள சம்பவம் சட்டத்தின் ஆட்சிக்கு சவாலாக அமைந்துள்ளது. தமிழகத்தை நடுங்க வைக்கும் இக்கொடூர சம்பவத்தை நேரில் பார்த்த சின்னதுரையின் உறவினர் கிருஷ்ணன் அதிர்ச்சியால் மரணமடைந்துள்ளார்.

வள்ளியூர் அரசு நிதியுதவி பெறும் பள்ளியில் பயின்று வரும் சின்னதுரை நல்ல அறிவும், திறனும் பெற்றிருக்கும் மாணவர். இவரது நற்பண்புகளையும், பழக்க வழக்கங்களையும் ஆசிரியர் பாராட்டிப் பேசியதை, அவருடன் படிக்கும் சக மாணவர்களில் சிலர் சகித்துக் கொள்ள முடியாத அளவில் சாதிவெறி நிலவி வருகிறது.

மாணவர்களின் அறிவுக் கண்களை குருடாக்கி, அரிவாள் தூக்கி, வீடு புகுந்து வெட்டிக் கொலை செய்யும் சாதி வெறியை இப்பகுதியில் உள்ள சமய மடம் ஒன்று ஊக்கப்படுத்தி வளர்த்து வருவதாகவும், வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் கூலிக் கொலைகாரர்கள், அடியாட்கள், ரவுடிகள் என கிராமங்களில் குற்றவாளிகள் நிறைந்து கிடப்பதாகவும் கூறப்படும் புகார்களை தமிழ்நாடு அரசு தனிக்கவனம் செலுத்தி விசாரிக்க வேண்டும்.

சாதிவெறியைத் தூண்டும் செயலில் ஈடுபடுவோர் மீது இரக்கம் காட்டாது, இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்.

அரிவாளால் வெட்டுப்பட்ட சின்னதுரை, நெல்லை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சின்னதுரையை கொலைகாரர்களிடம் இருந்து காப்பாற்றச் சென்ற அவரது சகோதரி வெட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர்களுக்கு தேவையான சிகிச்சை அளிப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். அவரது கல்விச் செலவை அரசு ஏற்கும் என கூறியிருப்பது ஆறுதல் அளிக்கும் எனினும் அவரது குடும்பத்துக்கு அரசு முழு பாதுகாப்பு அளிக்க வேண்டும். இக் குற்றச் சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்பட்டு சட்டத்திலிருந்து தப்பிவிடாமல் கடுமையாகத் தண்டிக்கும் வகையில் வழக்கை அரசு விழிப்புடன் நடத்த வேண்டும். சின்னதுரை பயின்று வரும் பள்ளியில் சாதிய தீண்டாமை எழுதப்படாத விதியாக நிலவுகிறது. இதற்கு எதிராக கருத்துச் சொல்பவர்கள் ஆசிரியர்கள் என்றாலும் அச்சுறுத்தி விரட்டப்படுகின்றனர். இதனால் பள்ளியில் பயிலும் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இங்கு சமூகநீதி கொள்கையில் உறுதி கொண்ட பள்ளி ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

இப்பகுதியில் நீண்டகாலமாக நிலவி வரும் வேலையின்மை, சாதி வெறி வளர்க்கும் சமூக விரோத கும்பலுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. இப்பகுதியில் வேலைவாய்ப்புகளை உருவாக்க கலைஞர் ஆட்சியில் அமைக்கப்பட்ட இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தொழில்களை தொடங்கவும், தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவும் அரசு போர்க் கால வேகத்துடன் செயல்பட வேண்டும். இங்கு முதலீடு செய்து தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கு மேலும் கூடுதல் சலுகைகள் அறிவிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## வண்டவாளம்

### ஹரியானாவில் முஸ்லிம் வியாபாரிகளுக்கு தடை



பாஜகவால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் சூழலில் ஹரியானாவில் ரிவாரி, மகேந்திரகர், ஜஜ்ஜர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 50 கிராம பஞ்சாயத்து தலைவர்கள், காய்கறிகள் உள்ளிட்ட இதர வியாபாரங்களுக்காக முஸ்லிம் வியாபாரிகள் ஊருக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளதாக கடிதம் எழுதியுள்ளனர். குருகிராமில் வன்முறையால் பாதிக்கப்பட்ட 5000 முஸ்லிம் வியாபாரிகள் வெளியேறி விட்டனர்.

மகேந்திரகர் உதவி ஆட்சியாளர் மனோஜ் குமார் கூறுகையில் முஸ்லிம் வியாபாரிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படும். கடிதம் எழுதியவர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். தடை விதித்தவர்கள் மீது தண்டனை விதிக்கப்பட்டு, வெளியேறிய முஸ்லிம் வியாபாரிகள் திரும்பி வந்து மீண்டும் வியாபாரம் நடத்த முடியுமா என்பதே கேள்வி?

### ஈரோடு புத்தக கண்காட்சியில் இந்துத்துவ எதிர்ப்பு புத்தகங்கள் விற்பனைக்கு மிரட்டல்

ஈரோட்டில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் ஆர் எஸ் எஸ் கும்பலுக்கு ஆதரவாக, காவல் ஆய்வாளர் இந்துத்துவ எதிர்ப்பு புத்தகங்களை கண்காட்சியில் விற்பனை செய்யக் கூடாது என்று மிரட்டியுள்ளார். செந்தலிதபன் எழுதியுள்ள இந்துத்துவப் பாசிச வேர்களும் விழுதுகளும் என்ற புத்தகம் போன்ற பல்வேறு புத்தகங்களை கோடிட்டு காட்டி இது போன்ற புத்தகங்கள் கண்காட்சியில் வைக்கக் கூடாது என்று மிரட்டியுள்ளார். இந்த காவல்துறை ஆய்வாளர் மீது தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது. காவல்துறையிலும் சிலர் ஆர்.எஸ். எஸ். அரசியலுக்கு பலியாகி உள்ளனர். இதுகுறித்து அரசும், மதச்சார்பற்ற சக்திகளும் விழிப்பாக இருக்க வேண்டும்.

### மணிப்பூர் பற்றி எரியும் போது நாடாளுமன்றத்தில் நகைச்சுவையா?



மணிப்பூர் தீப்பற்றி எரியும் போது நாடாளுமன்றத்தில் சிரிப்பும், நகைச்சுவை பேச்சும் சரிதானா? என பிரதமர் மோடிக்கு ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.


நாடாளுமன்றத்தின் பிரச்சனை நானோ அல்லது காங்கிரஸ் கட்சியோ அல்ல, மணிப்பூர் பற்றி எரிவது என்பதை பற்றி தான்! அரசாங்கம் நினைத்தால் ராணுவத்தைக் கொண்டு, ரெண்டு மூன்று நாட்களில் வன்முறையை அடக்கி விட முடியும்! ஆனால் அரசு அதைச் செய்ய முன் வரவில்லை!

மாறாக பிரதமர் நகைச்சுவையாக பேசுகிறார். சிரிக்கிறார். அதற்கு ஆதரவாக ஆளுங்கட்சி எம்.பி. க்கள் கோஷம் எழுப்புகிறார்கள், மேஜையை தட்டுகிறார்கள். பிரதமர் மோடிக்கும், ஆளுங்கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சி எம்பி களுக்கும், மணிப்பூர் பற்றி எரிவதைப் பற்றி கவலை இல்லை என்று தனது பேட்டியில் ராகுல் காந்தி பேசியுள்ளார்.

ஆளுங்கட்சிக்கும், பிரதமருக்கும் சூடு சொரணை இருக்குமா?

### பாலியல் வன்கொடுமையை தடுப்பது அரசின் கடமை

**உச்சநீதிமன்றம் ஒன்றிய அரசின் உச்சந்தலையில் குட்டு!**



மணிப்பூர் வன்முறை கொடுமை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி. ஒய். சந்திர சூட், ஜே. பி. பார்தி வாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளது.

வன்முறை கலவர காலகட்டங்களில், எதிர்த்தரப்பினரை அடிபணிய வைப்பதற்கு பெண்கள் மீதான பாலியல் வன்முறையை கையில் எடுக்கின்றன.

பெண்கள் மீதான இத்தகைய வன்முறை, அரசியல் அமைப்புச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்ட கண்ணியம், தனிமனித சுதந்திரம் ஆகிய மாண்புகளுக்கு முற்றிலும் விரோதமானதாகும். அதனை ஒருபோதும் ஏற்க முடியாது.

பெண்களுக்கு ஏற்படும் பாலியல் வன்முறைகளை தடுப்பது அரசின் முதன்மையான கடமை. மணிப்பூரில் பாலியல் வன்கொடுமை தொடர்பான நபர்களை அடையாளம் கண்டு கைது செய்யும் நடவடிக்கை விரைவு படுத்தப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில் கூறியுள்ளது. உச்சந்தலையில் இடித்த இடி மோடியின் மூளைக்குள் இறங்குமா?

# ஜனநாயக குடியரசை அழி

**அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரின் தொடக்க நாள் முதலே மணிப்பூர் வன்முறை, வன்கொடுமை நிகழ்வுகள் குறித்து பிரதமர் வாய் திறந்து பேச வேண்டும் என பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் களமிறங்கின. எதற்கும் அசைந்து கொடுக்காத பாஜகவை வழிக்கு கொண்டு வருவதன் பொருட்டு, ஆளும்கட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து மணிப்பூர் விவகாரம் குறித்து எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணி பேச வைத்தது.**



அருண் நெடுஞ்செழியன்

வேறு வழியின்றி வேண்டாவெறுப்பாக நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து தீர்மானத்திற்கு பதிலளித்துப்பேசியபிரதமர் மோடி, தான் ஆற்றிய இரண்டு மணி நேர உரையில், வெறும் இரண்டு நிமிடங்கள் மட்டுமே மணிப்பூர் வன்முறை குறித்துப் பேசினார். அதுவும் எள்ளல் தொனியில் நகைச்சுவையாகவும் பொறுப்பற்ற வகையிலும் பேசி, இறுதியில் வழக்கம்போல இறந்துபோன முன்னாள் பிரதமர் நேரு மீது குற்றம்சாட்டிவிட்டு நழுவிச் சென்றுவிட்டார்.

நாட்டின் மிகவும் அவமானகரமான மணிப்பூர் வன்முறைக்கு பாஜகவின் வெறுப்பு அரசியலே முதன்மைக் காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வரும் நிலையில், இது குறித்து பிரதமரை பேச வைப்பதற்கே எதிர்க்கட்சிகள் இவ்வளவு அமளியும் போராட்டமும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்றால், எதிர்க்கட்சிகள் மீதும் நாடாளுமன்ற மாண்பின் மீதும் பாஜகவிற்கு இருக்கிற "மரியாதையை" புரிந்துகொள்ளலாம்.

மணிப்பூர் வன்முறை குறித்து பிரதமருக்கு முன்பே உச்சநீதிமன்றம் தலையிட்டு கண்டனம் தெரிவித்துவிட்டது; பிறகு எதிர்க்கட்சிக்களின் இடைவிடாத போராட்டங்களின் பலனாக மணிப்பூர் குறித்து பிரதமரை இரண்டு நிமிடம் பேச வைக்க முடிந்தது என்பதை கவனிக்க வேண்டும்.

இவ்வளவு அமளிகளுக்கு இடையே நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில், இரு அவைகளிலும் மொத்தம் 23 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் டெல்லி சேவைகள் மசோதாவை தவிர மக்களவையில் நிறைவேற்றப்பட்ட எந்த மசோதாக்களும் விவாதமின்றி பாஜகவின் பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, நாட்டின் கனிம வளங்களை கார்பரேட்டுகளுக்கு தாரைவார்க்க வகை செய்கிற வன (பாதுகாப்பு) திருத்த மசோதா 2023, உயிரியல் பன்மிய (திருத்த) மசோதா 2021 போன்ற முக்கிய மசோதாக்கள் எந்தவித விவாதமும் இன்றி சட்டமாக்கியது தான் பெரும் கொடுமை.



நாட்டில் பற்றி எரிகிற பிரச்சனை குறித்து ஒரு திறந்த விவாதத்திற்கு கூட வர இயலாத பிரதமரையும், எந்தவித விவாதங்களும் இன்றி மசோதாக்களை சட்டமாக்கத் துடிக்கிற பாஜகவும் பெரும்பான்மை பலத்தின் மூலமாக நாடாளுமன்ற ஜனநாயக இருப்பையே கேள்விக்குள்ளாக்கி வருவது எதார்த்த உண்மையாகிவிட்டது.

#### பாஜகவை நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்த முடிந்ததா?

மணிப்பூர் வன்முறை தொடங்கி அரியானா வகுப்புவாத கலவரம் வரை தொடர்கிற பாஜகவின் வெறுப்பு அரசியலை எதிர்க்கட்சிகள் முதற்கொண்டு நீதிமன்றம் வரை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதுதான் மறுக்க முடியாத உண்மை. நாடாளுமன்ற பெரும்பான்மை என்ற ஆயுதத்தை வைத்துக்கொண்டு நாட்டின் ஒட்டுமொத்த குடியரசு விழுமியங்களையும் ஆர்.எஸ்.எஸ்பாஜக தகர்த்துக் கொண்டிருக்கிறது என்பதைநாட்டின் ஜனநாயக சக்திகள் உணரவேண்டும்.

பாஜக ஆட்சி காலத்தில் நாடாளுமன்றத்திற்கு வெளியே முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவதையும், நாடாளுமன்றத்தை அதிகாரமற்ற அவையாக மாற்றுவதிலும் ஆர்.எஸ்.எஸ் பாஜக முனைப்பாக செயல்படுவதை கவனிக்கவேண்டும். உதாரணமாக கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளான செல்லாப்பணம் அறிவிப்பு, கொரோனா ஊரடங்கு உத்தரவு போன்ற அறிவிப்புகளை பிரதமர் மோடி தொலைக்காட்சியில் தோன்றி அறிவித்தது தற்செயலானது அல்ல!

அதுபோல கடந்த பத்தாண்டுகால பாஜக ஆட்சியில் பிரதமர் மோடி ஒருமுறை கூட பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை நடத்தியதில்லை என்பதும் தற்செயலானது அல்ல. நாடாளுமன்றத்திற்கு உள்ளே எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை விவாதிக்க மறுக்கும் போக்கையும்; நாடாளுமன்றத்திற்கு வெளியே அமலாக்கத்துறை, வருமானவரித்துறை மூலமாக எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துகிற போக்கையும், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவசர அவசரமாகப் பறித்ததையும் தொகுத்துப் பார்த்தால், ஜனநாயக குடியரசு அமைப்பை பாஜக ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இன்னும் குறிப்பாக சொல்லப்போனால், கடந்த பத்தாண்டுகால பாஜக ஆட்சியில் அதனது நாடாளுமன்ற அணுகுறை, எதிர்க்கட்சிகள் மீதான அணுகுமுறை, மதச் சிறுபான்மையினர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு வன்முறை வெறியாட்டங்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மீதான சட்டப்பூர்வ வன்முறை, மாற்றுக் கட்சிகளை உடைப்பது, பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ஆட்சியை கவிழ்ப்பது, கவிழ்க்க முடியாத மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாக குழப்பங்கள் விளைவிப்பது, புதிய கல்விக் கொள்கை மூலமாக மாநில கல்வி உரிமைகளைப் பறிப்பது, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியவற்றின் சுயாதீனப் பண்பைப் பறித்து, தனது தேர்தல் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வது போன்ற பாஜகவின் செயல்பாடுகளை தொகுத்துப் பார்த்தால், நமக்கொரு சித்திரம் தெளிவாகக் கிடைக்கும். அதாவது தமது சித்தாந்தம், திட்டம் ஆகியவற்றுக்குத் தடையாக தனிநபர்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகள் என எது வந்தாலும் பலவந்தமாகவும் சூழ்ச்சிகள் மூலமாகவும் அந்தத் தடைகளை அகற்றி தனது திட்டத்தை நடைமுறைப் படுத்துவது என்ற இலக்கில், ஆர்எஸ்எஸ் பாஜக முன்னேறுவது தெளிவாகிறது. தனது திட்டங்களுக்கு குடியரசு அமைப்புமுறை தடையாக இருந்தால் அதையும் தகர்க்க பாஜக தயங்காது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

பிரதமர் மோடி தலைமையிலான கடந்த பத்தாண்டு கால ஆட்சியில், ஜனநாயகக் குடியரசு ஆட்சி வடிவத்தின் அதிகாரத்தைக் குறைத்து, பிரதமர் அலுவலகத்தில் நாட்டின் ஒட்டுமொத்த அதிகாரங்களையும் குவித்துக் கொண்டு தங்களது திட்டங்களுக்கு ஏற்றவாறு ஆட்சி நடத்துகிற பாஜகவின் ஆட்சி முறையானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரோமை ஆட்சி செய்த ஜூலியஸ் சீசரின் ஆட்சி முறையை நினைவூட்டுகிறது.

#### ரோமக் குடியரசு மீதான ஜூலியஸ் சீசரின் தாக்குதல்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கிரேக்கக் குடியரசு ஆட்சிமுறையும் ரோமக் குடியரசு ஆட்சி முறையும் இன்றைய நாடாளுமன்ற ஜனநாயக குடியரசு ஆட்சி வடிவத்தின் கரு வடிவாக கொள்ளலாம். ரோமக் குடியரசை எடுத்துக்கொண்டால் "செனட்" என்ற மக்கள் பிரதிநிதிகள் சபையானது நாட்டின் தலைமை ஆட்சியாளரை கட்டுப்படுத்துகிற அதிகாரம் கொண்டதாக இருந்தது. நாட்டின் அரசியல் சட்டங்களையும் உருவாக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் செனட் அமைப்பே மையப் பாத்திரம் வகித்தது. இந்த அமைப்பு முறையானது மாற்றுக் கருத்துக்களை விவாதிக்கிற ஜனநாயக வெளியை உறுதிப்படுத்துவதாக அமைந்தது. அதேநேரத்தில் தனிநபர்களின் கைகளில் நாட்டின் ஒட்டுமொத்த அதிகாரக் குவிப்பையும் தனிநபர்களின் சொந்த திட்டங்களையும்/சித்தாந்தத்தையும் செனட் கட்டுப்படுத்தியது. ரோமக் குடியரசின் இந்த ஜனநாயக ஆட்சி வடிவத்திற்கு தலைமைப் படைத்தளபதி ஜூலியஸ் சீசர் மூலமாக ஆபத்து நேர்ந்தது.

கவுள் நாடுகளின் (இன்றைய ஜெர்மன், இங்கிலாந்து) மீதான படையெடுப்புகள் மற்றும் உள்நாட்டு கலவரங்களை வெற்றிகரமாக அடக்கிய பிறகு ஜூலியஸ் சீசரின் செல்வாக்கு ரோமில் வானளவு உயர்ந்தது. ஜூலியஸ் சீசரின் இந்தப் போர்

# க்கத் துடிக்கும் மோடி அரசு!



வெற்றிகளும் செல்வாக்கும் சீசரை சர்வவல்லமை கொண்ட சர்வாதிகாரியாக மாற்றியது. ஒரு கட்டத்தில் செனட் அமைப்பின் அதிகாரத்தைப் பறித்து தன்னை சர்வாதிகாரியாக அறிவித்துக் கொண்டார் சீசர். பிறகு, ஒப்புக்கு இருந்த செனட் அமைப்பையும் கலைத்து விட்டு குடியரசு ஆட்சி வடிவத்தை ஒழித்து, ரோமக் குடியரசை ரோம முடியரசாக மாற்றி ரோமப் பேரரசின் நிரந்தர மன்னனாக முடிசூட்டிக்கொள்ள முடிவெடுத்தார் ஜூலியஸ் சீசர்.

சீசரின் இந்த அதிகார குவிப்பைக் கண்டு அஞ்சிய செனட்டர்கள், சீசரை விட்டுவைத்தால் ரோமக் குடியரசுக்கு ஆபத்து என நினைத்து அவரைப் படுகொலை செய்தார்கள். (ஷேக்ஸ்பியரின் நாடகம், ஜூலியஸ் சீசரின் படுகொலையை காவியமாயாக்கியது தனிக்கதை) எந்தக் குடியரசைக் காக்க வேண்டும் என நினைத்து செனடர்கள் சீசரை படுகொலை செய்தார்களோ, அந்தக் நோக்கத்திற்கு நேர் மாறாக ரோம் மாறியதுதான் வரலாற்று சோகம்.

ஜூலியஸ் சீசரின் ஆட்சிக்குப் பிறகு நடந்த உள்நாட்டுப் போரை கட்டுப்படுத்தி ஆட்சிக்கு வந்த சீசரின் மருமகன் ஆக்டோவியன், அகஸ்டஸ் சீசர் என பெயர் சூட்டிக் கொண்டு தன்னை மன்னனாக அறிவித்து, ரோமக் குடியரசை ரோமப் பேரரசராக மாற்றினார். ரோமக் குடியரசு ரோம முடியரசாக மாறியது.

### குடியரசு மீதான தாக்குதல்கள்

அண்மையில் மன்னராட்சி கால அரசியல் அதிகார அடையாளமான “செங்கோலை” நாட்டின் மிகப்பெரும் ஜனநாயக குடியரசு ஒன்றான இந்தியாவின் புதிய நாடாளுமன்ற அவையின் மைய மண்டபத்தில் பாஜக நிறுவியது என்பது குடியரசு அமைப்பிற்கு எதிரான அதனது சித்தாந்தாத்தையே அப்பட்டமாக வெளிப்படுத்துகிற செயலாக அமைந்தது. செங்கோல் என்பது மன்னராட்சியின் அடையாளமாகும். குறிப்பாக ஒற்றை தலைமை, ஒற்றை அதிகார பீடத்தின் குறியீடாகும். சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவத்திற்கு நேரதிரானது. செங்கோல் நிகழ்ச்சி நிரலை மார்க்சிய மொழியில் சொல்வதென்றால், நிலப்பிரபுத்துவ கால மன்னராட்சியின் அதிகாரக் குறியீடாகும்.

குடியரசின் அடையாளமான நாடாளுமன்ற அவையில் முடியரசின் அடையாளத்தை பாஜக வைப்பதன் மூலம், நாட்டிற்கு தனது நிலைப்பாட்டை உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்திவிட்டது. குடியரசு அமைப்பு முறை மீதான தனது ஒவ்வாமையை, நம்பிக்கையின்மையை வெளிப்படையாக அறிவிப்பதாகக் புரிந்து கொள்ளலாம்.

நவீன முதலாளித்துவ சமூகத்தில் குடியரசு அமைப்பு வடிவத்தை கலைத்துக் விட்டு மீண்டும் ஒற்றை மன்னராட்சி முறையான முடியரசுக்கு திரும்பிப் பின்னோக்கிச் செல்வது என்பது முரண்பாடாகத் தெரிந்தாலும், வரலாற்றில் சில துயரமான காலங்களில் அத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரோமில் நடைபெற்ற வரலாற்றுத்துயரமானது, 19 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் மீண்டும் நிகழ்ந்தது. பிரான்சில் ஏற்பட்ட புரட்சியின் போது முதலாளித்துவக் கட்சிகளையும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளையும் ஒடுக்கிவிட்டு, பிரான்சின் மன்னனாக லூயி போனபார்ட் முடிசூட்டிக் கொண்டார். லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமர் என்ற மார்க்சின் புகழ்பெற்ற நூலில் இந்த வரலாற்று சோகத்தை மார்க்ஸ் அற்புதமாக எழுதியிருப்பார். பின்னர் இருபதாம் நூற்றாண்டில் மன்னர் ஆட்சிக்கு சமமான சர்வாதிகாரியாக முசோலினியும் ஹிட்லரும் அதிகாரத்தை தங்கள் கைகளில் குவித்துக் கொண்டனர்.

முடியரசு மற்றும் சர்வாதிகார ஆட்சியாளர்களின் பொதுவான பண்புகளாக சிலவற்றைக் குறிப்பிடலாம். இவர்கள் பொதுவாக மக்கள் பிரதிநிதிகள் சபைகளை மதிக்கமாட்டார்கள். மதவெறி, வெறுப்பு அரசியலை பரப்புவார்கள், அதிகாரப் பகிர்வு, விவாதங்கள் போன்ற ஜனநாயக பண்புகளை அறவே வெறுப்பார்கள். மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வழங்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தை ஏகபோகமாக கைப்பற்றுவதன் மூலம் தங்களுக்கு உகந்த திட்டங்களை /கொள்கைகளை நாட்டின் கொள்கையாக பலவந்தமாக திணிக்க முயல்வார்கள். அதற்குத் தடையாக இருக்கிற ஜனநாயக சக்திகளை அரசியல் எதிரிகளாக பாவித்து அவர்களை சிறையில் அடைத்து சித்தரவதை செய்வது, கொலை செய்வது போன்ற பாதக செயல்களை சாதாரணமாக செய்வார்கள். வன்முறையை சட்டபூர்வமாக்குவது இவர்களின் முக்கிய பண்பாகும். வன்முறைக்கு சட்ட முலாம் பூசி விட்டால், அரசுக்கு எதிரான ஜனநாயகவாதிகள் அனைவர் மீதும் தேசத் துரோகிகள், தீவிரவாதிகள் முத்திரை குத்திவிடலாம். உதாரணமாக யூதர்களுக்கு எதிரான இன ஒடுக்குமுறையை நியூரம்பர்க் சட்டங்கள் மூலமாக ஹிட்லர் நிறைவேற்றினான். நாசிகளும் பாசிஸ்ட்களும் கம்யூனிஸ்ட்களை அரசியல் எதிரிகளாக அறிவித்துப் படுகொலை செய்தும் சிறையில் அடைத்தும் சித்தரவதை செய்தனர்.

முடியரசர்கள், சர்வாதிகாரிகள் பொதுவாக அரசையும் ராணுவத்தையும் ஒன்றாக இணைத்துக் கொள்வார்கள். ஆனால் குடியரசு வடிவத்தில் ராணுவத்திற்கு அரசியலில் எந்தவித இடமும் இல்லை.

மேலே குறிப்பிட்ட இந்த பொதுப் பண்புகளை கடந்த பத்தாண்டு கால ஆர்எஸ்எஸ் மோடி ஆட்சியில் நடைபெற்றுவரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுடன் பொருத்திப் பார்த்தால் தெளிவாகும்.

### இந்தியாவின் எதிர்காலம்

சமூக வரலாற்றின் வளர்ச்சி கட்டங்களாக நிலப்பிரபுத்துவ ஆட்சி, முதாளித்துவ ஜனநாயகக் குடியரசு ஆட்சி, சோசலிசம் ஆகிய படிநிலைகளை சமூகத்தின் இயக்கவியல் விதியாக மார்க்சியம் சுட்டிக் காட்டுகிறது. வரலாற்றின் வளார்ச்சிக் கட்டங்களில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, உற்பத்தி உறவுகளின் மாற்றமானது பொருத்தமான ஆட்சி வடிவத்தை தீர்மானிக்கிறது என்பதை மார்க்சியம் விளக்குகிறது. ஆனால் வரலாற்றில் சில சமயம் இந்த முன்னோக்கிய வரலாற்று சக்கரத்தை பின்னோக்கில் இழுக்கின்ற பழமைவாத சக்திகள் அவ்வப்போது தோன்றிவிடுகின்றனர். ஜூலியஸ் சீசர் தொடங்கி நெப்போலியன் போனபார்ட், முசோலினி, ஹிட்லர் போன்றவர்கள் அதிகார வேட்கைக்காக ஜனநாயக குடியரசு விழுமியங்களை குழிதோண்டிப் புதைக்க முயல்கின்றனர். அதில் வெற்றியும் பெற்றனர். ஆனால் இந்த வெற்றி தற்காலிகமாகத்தான் நீடித்தது. இத்தாலியும், ஜெர்மனியும் பிரான்சும் மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயக குடியரசாக மாறியது வரலாறு. ஏனெனில் அதுவே இயக்கவியல் விதியும் கூட. வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளுக்கு பொருத்தமான உற்பத்தி உறவுக்கு, பொருத்தமற்ற ஒரு ஆட்சி வடிவம் நீடிக்க முடியாது. அவ்வாறு நீடித்தால் அந்த சமூகத்தின் பல்வேறு வர்க்க அடுக்குப் பிரிவினர் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

சர்வாதிகாரிகளுக்குப் புரியாத விஷயம் என்னவென்றால், முடியாட்சி காலத்தில் மக்கள் என்ற அடையாளத்தில் இருந்தவர்கள், குடியரசு காலத்தில் குடிமக்கள் ஆகின்றனர். அதோடு குடிமக்களின் உரிமை என்றும் ஆகியது. முடியாட்சியில் மக்களின் கடமை என்பது குடியரசில் உரிமை என மாறியது. ஜனநாயகப் புரட்சியின் பயனாக விளைந்ததாகும். இந்த முன்னோக்கிய பாய்ச்சலை, பின்னோக்கி இழுப்பது என்பது நேரத்தை கடந்த காலத்திற்கு இழுப்பதற்குச் சமமாகும்.

சர்வாதிகாரிகள் எவ்வளவுதான் ஒடுக்குமுறைகளையும் வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டாலும் சமூகப் புரட்சிகள் மென்மேலும் வீறுகொண்டு எழும் என்பதே வரலாறு. எனவே, பாஜகவும் ஆர்எஸ்எஸ் அமைப்பும் வெற்றி பெறுவது போலத் தெரிந்தாலும், இந்த வெற்றி தற்காலிகமானதுதான்!

தொடர்புக்கு: 9842391963

# வண்டவாளம்

## மிசோரம் பாஜக கூட்டணியில் இருந்து எம்.என்.எப். கட்சி வெளியேறுகிறது!

வடகிழக்கு மாநிலமான மிசோரமில் ஒரே ஒரு தொகுதியில் வென்றுள்ள பாஜக, 26 தொகுதிகள் வென்ற எம்.என்.எப். கட்சியுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசும்போது ”மியான்மர் நாட்டிலிருந்து வந்தேறி குக்தி இனங்களே மணிப்பூர் வன்முறைக்கு காரணம்” என்று பேசினார்.

இந்தப் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து எம். என். எப். கட்சியின் மக்களவை எம்.பி. யான சி.லால்ரோல்சங்கா நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். எதிர்க்கட்சி எம்.பி. க்கள் வரிசையில் அமர்ந்தார். பின்பு எதிர்க்கட்சியுடன் வெளிநடப்பும் செய்தார்.

மாநிலங்களவையில்எம். என். எப். கட்சியின் எம். பி.யான வன்லால்வேனா பேசும்போது “நான் மிசோரம் மாநிலத்திலிருந்து வந்துள்ள பழங்குடி வகுப்பைச் சார்ந்தவன். நாங்கள் அந்நிய நாட்டில் இருந்து வந்து குடியேறியவர்கள் அல்ல. மியான்மர் நாட்டு குடிமக்கள் அல்ல, நாங்கள் இந்தியர்கள். விடுதலைக்கு முன்னரே வடகிழக்கு மாநிலங்களில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் பழங்குடிகள்” என்று ஆவேசமாக பேசினார்..

இதனால் இப்போது பாஜக கூட்டணி உடையும் நிலை ஏற்பட்டுள்ளது!

## வெறுப்புணர்வு பேச்சுக்களை எவராலும் ஏற்க முடியாது: உச்சநீதிமன்றம் தெளிவு!

ஷாமீன் அப்துல்லா என்ற பத்திரிக்கையாளர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

சமீபத்தில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 27 க்கு மேற்பட்ட பேரணிகளில் முஸ்லிம்களை கொல்ல வேண்டும். அவர்களை சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் புறக்கணித்து ஒதுக்க வேண்டும் என்பது போன்ற பேச்சுக்கள் பேசப்பட்டுள்ளன.


அரியானா மாநிலம் ஹிஷார் பகுதியில் சம்ஹஸ்த் ஹிந்து அமைப்பின் சார்பில் நடைபெற்ற பேரணியில், முஸ்லிம்களை வேலைக்கு வைத்துள்ளவர்களின் கடைகள் புறக்கணித்து ஒதுக்கப்படும் என்று காவல்துறை முன்னிலையில் எச்சரிக்கை விடப்பட்டது.

மத்திய பிரதேசத்தில் சாகர் பகுதியில் விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் நடைபெற்ற பேரணியில், காவல்துறையினர் இருந்தபோதே முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடவும், அவர்களை ஒதுக்கி வைக்கவும் வெளிப்படையாக பேசப்பட்டது. இதுபோன்ற வெறுப்பு பேச்சுகள் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் அல்ல, நாடு முழுவதும் அளவிட முடியாத அளவுக்கு வன்முறைக்கு வழிவகுக்கிறது என்று மனுதாரர் தன் மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, எஸ்.ஏ.வி.என் பாட்டி ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

வெவ்வேறு சமூகத்தினர் இடையே நல்லிணக்கம், மரியாதை இருக்க வேண்டும். அனைத்து சமூகத்தினருக்கும் பொறுப்புணர்வு உள்ளது. வெறுப்புணர்வு பேச்சுக்கள் நல்லதல்ல, அதை எவராலும் ஏற்க முடியாது. என்று கூறி வழக்கை ஆகஸ்ட் 18ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்

மோடி அரசை உச்சநீதிமன்றம் எல்லா பக்கங்களிலும் இடிக்கிறது. ஆனால் ரோஷம்தான் வரவில்லை!

## குஜராத் மாநிலத்தில் ஊட்டச் சத்து குறைபாட்டால் மடியும் குழந்தைகள்!



2022 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வெளிவந்த தரவுகளின் படி, குஜராத் மாநிலத்தில் உள்ள 30 மாவட்டங்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 707 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. குஜராத்தில் 3 ஆயிரம் கோடி செலவில் வல்லபாய் பட்டேலுக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது. அந்த நர்மதா மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரத்து 429 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 1,01,586 குழந்தைகள் எடை குறைவாகவும், 24 ஆயிரத்து 121 குழந்தைகள் தீவிரமான எடை குறைபாட்டாலும் பாதிக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

உண்மை நிலை இவ்வாறு இருக்க, குழந்தைகள் நலத் திட்டத்திற்கு குஜராத் அரசு ஆண்டுக்கு ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து சிரஞ்சீவி யோஜனா, பால் போக் யோஜனா, வைட்டமின் யுகத் போஜன், ஆஹா யோஜனா, கன்யா சவானி யோஜனா, பால் சகா மையம் என்று திட்டங்கள் செயல்படுத்தி வரும் நிலையில், குஜராத்தில் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் மடிவது ஏன்? ஆயிரம் கோடி ரூபாய் எங்கே போகிறது?

மோடியின் பாஜக ஆட்சியில் காணாமல் போன பெண்கள், சிறுவர்கள் 3 லட்சத்து 13 ஆயிரம்!

# நீட் பிரச்சினையில் ஆளுநரின் அடாவடித்தனம்



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

**கடந்த 12.08.2023 அன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நீட் தொடர்பாக , மாணவி ஒருவரின் தந்தை எழுப்பிய கேள்விக்கு, ஆளுநர் ஆர்.என்.ரவி அளித்த பதில் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளது.**



● ஜெகதீஸ்வரன்,



● செல்வசேகர்

``முடிவெடுக்கக் கூடிய இடத்தில் நான் இருந்தால் நீட் விலக்கு மசோதாவிற்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்கமாட்டேன்'' என அவர் கூறியுள்ளார். இது அரசியல் சட்டத்திற்கும், மாநில உரிமைகளுக்கும், கூட்டாட்சி கோட்பாட்டிற்கு எதிரானதாகும்.

### மருத்துவக் கல்வி வணிகத்தை நீட் தடுத்துள்ளதா?

ஆளுநர் கூறுவதுபோல், மருத்துவக் கல்வி வணிகத்தை நீட் தடுத்திட வில்லை. உண்மையில் நீட்டிற்கும் மருத்துவக் கல்வி வணிகத்திற்கும் தொடர்பில்லை. நீட் மருத்துவக் கல்லூரியில் நுழைவதற்கான ஒரு போட்டித்தேர்வு மட்டுமே. மருத்துவக் கல்வி வணிகமயமாவதற்கு அரசின் தனியார் மயமாக்கல் மற்றும் வணிக மயமாக்கல் கொள்கைகள்தான் காரணம். நியாயமான கட்டண நிர்ணயம், அதை கறாராக நடைமுறைப் படுத்துதல், கட்டாய நன்கொடையை தடுத்தல், அரசு மருத்துவக் கல்லூரிகளை அதிகப்படுத்துதல் போன்றவையே மருத்துவக் கல்வி வணிகமாவதைதடுக்கும். ஆளுநர் கூறுவது போல், ``மருத்துவக் கல்வியில் நடைபெற்ற ரூபாய் 1000 கோடி வணிகத்தை'' நீட் தடுத்துவிட வில்லை. மாறாக ஒன்றிய அரசின் தனியார் மயமாக்கல் கொள்கை மருத்துவக் கல்வி வணிகத்தை தற்போது பல ஆயிரம் கோடியாக அதிகரிக்கவே காரணமாயுள்ளது.

### வணிகமயமாக்கும் ஒன்றிய அரசு

தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தனியார் நிகர்நிலை மருத்துவப் பல்கலைக் கழகங்களின் 50% இடங்களுக்கு மட்டுமே கட்டணத்தை அரசு நிர்ணயிக்குமென, தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் கூறுகிறது. அதையும் நிறைவேற்ற இயலாத வகையில் தனியார் கல்லூரிகள் நீதிமன்றத் தடை பெற்று அதிக கட்டணம் வசூலிக்கின்றன. ஓர் எம்பிபிஎஸ் இடத்தை ஒரு கோடி ரூபாய்க்கு கூட வெளிப்படையாகவே விற்கும் நிலை உருவாக்கப் பட்டுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்கள் லாப நோக்கோடு மருத்துவக் கல்லூரிகளை தொடங்கிடவும், மாவட்ட அரசு மருத்துவமனைகளை பயன்படுத்தி தனியார் நிறுவனங்கள் மருத்துவக் கல்லூரிகளை தொடங்கி டவும் அனுமதித்தது, மருத்துவக் கல்வி மேலும் வணிகமயமாக காரணமாகி யுள்ளன. ஆனால்,நீட் வணிகமயத்தை குறைத்துள்ளது என ஆளுநர் கூறுவது வடிகட்டிய பொய்.

### முறைகேடுகள் குறைந்துள்ளதா?

ஒரு சில பணம் படைத்தவர்கள் , முதலாம் ஆண்டு எம்பிபிஎஸ் படிப்பில் சேர்ந்து உயர்சிறப்பு மருத்துவப் படிப்புவரை ,தொடர்ச்சியாக படித்து முடிக்கும் 'பேக்கேஜ் முறை'யை நீட் தடுத்துள்ளது. இருப்பினும்,மிகப்பெரும் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் மாப்அப் கவன்சிலிங்,ஸ்ட்ரே கவுன்சிலிங்கை ஒன்றிய அரசு அனுமதித்தது. இது தனியார் மருத்துவ நிறுவனங்களின் கட்டணக் கொள்ளைக்கு உதவுகிறது.

ஆனால் ஒன்றிய அரசோ, தனியார் மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கு சாதகமாக , மாணவர் சேர்க்கை கலந்தாய்வை நடத்துகிறது. அவற்றின் இடங்கள் நிரம்ப வேண்டும் என்பதற்காகவே நீட் கட்ஆப் மதிப்பெண்ணும் ஒவ்வொரு ஆண்டும் குறைக்கப்படுகிறது.

### தற்கொலைகள் நடைபெறவில்லையா?

கடந்த ஓராண்டாக நீட் தேர்வால் தற்கொலைகள் நடைபெறவில்லை என ஆளுநர் கூறுகிறார் . ஆனால், நடப்பாண்டில் மட்டுமே ,நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கு பயிற்சி பெற்ற 20 மாணவர்கள், ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் மட்டும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

### பய உணர்வு உருவாக்கப்பட்டுள்ளது

நீட்டை பற்றிய பய உணர்வு தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது என ஆளுநர் கூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது. நீட் தேர்வே கடுமையானதாக இருப்பதும், அந்தத் தேர்வில் நல்ல மதிப்பெண்ணுடன் வெற்றி பெறாவிட்டால் மருத்துவப் படிப்பில் சேரமுடியாமல் போய்விடுமே என்ற கவலையுமே, அத்தேர்வு மீது மாணவர்களுக்கு இயல்பான பயத்தை உருவாக்கியுள்ளது. நீட்டில் தேர்ச்சி பெற்றால் போதும் மருத்துவ இடம் கிட்டிவிடும் என்ற அளவிற்கு ,மருத்துவப் படிப்பில் சேர விரும்புவோர் அனைவருக்கும் மருத்துவ இடங்கள் கிட்டும் நிலையோ,அல்லது மருத்துவப் படிப்பு கிட்டாவிட்டாலும் பரவாயில்லை, வேறு படிப்புகள் படித்தாலும் ,நல்ல ஊதியத்துடன் நல்ல வேலை கிட்டும் என்ற சமூக நிலைமை இருந்தாலோ, நீட் தேர்வைப்பற்றிய அச்சம் மாணவர்களிடம் இருக்காது. நீட் பற்றிய அச்சம் இன்றைய முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்பு உருவாக்கிய நெருக்கடியால் ஏற்பட்டதே.

### பயிற்சி மையங்கள்

``நீட் பயிற்சி மையங்கள் அவசியமில்லை. ஆசிரியர்கள் முறையாக கற்பித்தாலே போதும் . பயிற்சி மையங்களில் படிக்க வேண்டும் என்ற மாயை உருவாக்கப்பட்டுள்ளது'' என ஆளுநர் கூறியுள்ளார். ஆனால், எதார்த்தம் அதற்கு நேர் எதிராகவே உள்ளது. நீட்டிற்கு தனியார் பயிற்சி மையங்களிலோ அல்லது சிறந்த தனியார் உறைவிடப் பள்ளிகளிலோ பயிற்சி எடுப்பவர்கள்தான், மதிப்பெண்ணுடன் வெற்றி பெற முடிகிறது. மருத்துவக் கல்லூரிகளிலும் அதிக அளவில் சேர முடிகிறது. எனவே ,மிகச்சிறந்த தனியார் பள்ளிகளும், பயிற்சி மையங்களும் வசதி படைத்தோருக்கு நீட் மூலம் வாய்ப்புகளை வழங்குபவையாக உள்ளன. எனவே, ஆளுநரின் கருத்து ஏற்கத்தக்கதல்ல. சமத்திய இடைநிலை கல்வி வாரிய பாட்டத்திட்டத்தில் (சிநிஷிணி)நன்கு படித்தால் பயிற்சி வகுப்புகளுக்கே செல்ல வேண்டாம் என ஆளுநர் கூறுகிறார்.ஆனால்,அப் பாடத்திட்டத்தில் படிப்பவர்களும் கூட பயிற்சி வகுப்புகளுக்கு செல்கின்றனர் என்பதே எதார்த்தமான உண்மை.

### அரசுப்பள்ளி ஒதுக்கீடு

அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடே 600 அரசுப்பள்ளி மாணவர்கள் மருத்துவக் கல்வியில் சேர உதவியுள்ளது என ஆளுநர்



கூறுகிறார். ஆனால் இந்த அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டிற்கும் எதிராகவே ஒன்றிய அரசு இருந்துள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு தகுதி மற்றும் திறமைக்கு எதிராக அமைந்துவிடும் என ஒன்றிய அரசின் வழக்கறிஞர் சங்கரநாராயணன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதாடினார். அதே போல், அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த கடந்த அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், அந்த மசோதாவிற்கு அனுமதி வழங்காமல் அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் இழுத்தடித்தார் . அவரது அடாவடித் தனத்தை கண்டித்து பல்வேறு எதிர்கட்சிகளும் போராட்டம் நடத்தின.

புதுச்சேரி மாநிலத்தில் முந்தைய , வி.நாராயணசாமி அரசு, அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கிட நடவடிக்கை எடுத்த பொழுது, ஒன்றிய அரசு தடையாக இருந்தது. ஆனால் தற்பொழுது தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி , அந்த வரலாற்றை எல்லாம் மறந்துவிட்டு அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை நீட்டோடு இணைத்துப் புகழ்ந்து தள்ளுகிறார்.

### ஏழைகள் மருத்துவக் கல்லூரிகளில் சேர நீட் உதவியதா?

ஏழைகள் மருத்துவக் கல்லூரிகளில் சேர நீட் உதவியுள்ளது என்ற ஆளுநரின் வாதமும் தவறானது. சிறந்த பயிற்சி மையங்களில் படிக்கும் வசதியுள்ளோ ருக்கானதாக , மருத்துவக் கல்வியை , நீட் மாற்றிவிட்டது என்பதே உண்மை. நீட் அரசுப்பள்ளி மாணவர்களுக்கும், அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும், தமிழ்வழியில் படித்த மாணவர்களுக்கும், மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கும், முதல் தலைமுறை மாணவர்களுக்கும், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எதிராக அமைந்தது.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான இட ஒதுக்கீடே, ஏழைகளுக்கும் மருத்துவக் கல்லூரிகளின் கதவுகளை திறந்துவிட்டுள்ளது. எனவே ,ஏழைகள் அதிக அளவில் மருத்துவக் கல்லூரிகளில் படிக்க வேண்டுமெனில், நாடு முழுவதும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கும், அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் தனி உள் ஒதுக்கீடுகளை வழங்கிட வேண்டும். அவர்களுக்கான கல்விக் கட்டணங்களை தமிழ்நாடு அரசை போன்று இதர அரசுகளும் ஏற்க வேண்டும்.

### நீட் இல்லை எனில் அறிவாற்றல் முடங்கிவிடுமா?

நீட் இல்லை எனில் ,தமிழ்நாட்டு மாணவர்களின் அறிவாற்றல் முடங்கி விடும் என ஆளுநர் கூறுவது, உண்மைக்கு எதிரானது. ஒரு போட்டித்தேர்வு மட்டுமே அறிவாற்றலை தீர்மானித்து விடாது. மருத்துவக் கல்லூரியின் கட்டமைப்பு, கல்வியின் தரம், கற்றலில் தனிநபர் காட்டும் ஈடுபாடு, சிகிச்சை வழங்கலில் ஏற்படும் கூட்டுச் செயல்பாடு, அதானல் பெறும் அனுபவம்,அனுபவப் பகிர்வு, வாழ்நாள் முழுக்க தொழில் நுட்ப அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள காட்டும் ஆர்வம், அதற்கான வாய்ப்புகள் போன்றவையே மருத்துவர்களின் திறமையை தீர்மானிக்கும். நீட் இல்லாத பொழுது உருவாக்கப்பட்ட மருத்துவர்களும் திறமை மிக்கவர்களாகவே இருந்துள்ளனர் என்பதே வரலாறு.

தொடர்புக்கு:9940664343

## பாண்டிச்சேரி பல்கலை. நெருக்கடி பற்றி

# குடியரசுத் தலைவருக்கு பினாய் விஸ்வம் எம்பி கடிதம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளரும், சிபிஐ நாடாளுமன்றக் குழுத் தலைவருமான பினாய் விஸ்வம் இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்குப் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் கல்விச் சூழல் சீர்கேடு குறித்தும் அதன் மீது நடவடிக்கை எடுக்கவும் வேண்டி எழுதிய கடிதம் வருமாறு:

பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் உயர் கல்விக்கான மையமாகச் சுமார் 40ஆண்டுகளாக விளங்குகிறது. ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் உயர் கல்வி கற்றலில் அப்பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு நன்கறிந்த ஒன்று. அப்பல்கலைக் கழகம், பல்வேறு இடங்களில் அமைந்த 'பல்கலைக் கழகம் சார் கல்லூரி'களை தன் ஆட்சி அதிகார வளாகத்துக்குள் கொண்டுள்ளது. புதுச்சேரி யூனியன் டெரிடரியில் (பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால்), கேரளாவில் (மாகே) மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் (ஏனாம்) இவற்றுடன் ஒன்றியப் பிரதேசமான அந்தமான் நிக்கோபார் தீவுகள் என விரிந்த பூகோளப் பரப்பில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் என்ற பெயரிலேயே செயல்படும் கல்வி நிறுவனமாகும். பல்வேறு மொழிவாரி பிரதேசங்களின் ஊடாக விரிந்த செயற்பரப்பை உடைய தன்மை இப்பல்கலைக் கழகத்திற்குத் தனித்தவொரு குணத்தை வழங்கியுள்ளது.

உயர் கல்வி கற்றலுக்கான இந்நிறுவனம் செய்திகளில் வருவது கல்விப் புலனச் சாதனைகளுக்காக இல்லாமல், மாறாக முறையற்ற ஒழுங்கின்மைகள், ஊழல் மற்றும் கல்விப் புலனச் சீர்கேடு சூழலுக்காக இப்பல்கலைக் கழகத்தின் பெயர் செய்திகளில் வருகிறது.

பல்கலைக் கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் குர்மீத் சிங் மற்றும் அதிகாரிகளால் கோடிக் கணக்கில் பணம் முறைகேடாகச் சுருட்டப்பட்டு விட்டதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் மிகக் கடுமையான தன்மையில் உள்ளது மட்டுமல்ல, மெட்ராஸ் உயர்நீதிமன்றம் இப்பிரச்சனை குறித்து மத்திய புலனாய்வு குழு விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது. தற்போதைய துணைவேந்தர் பதவியில் தொடருவார் எனில், இந்தத் தன்மையிலும் அளவிலும் நடைபெற்ற மோசடி, கல்விப் புலனச் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனெனில், நியாயம் மற்றும் நீதியின்பால் இத் துணைவேந்தர் கொண்டிருக்கும் பற்றுறுதி, அப்படி ஏதாவது ஒன்று இருக்குமானால் அது, மருந்துக்குக்கூட அவரிடம் இல்லை என்பதே.

துணைவேந்தர் குர்மீத் சிங பதவிக் காலம் ஏற்கனவே முடிந்து விட்டது, அவர் பத்து மாதங்களுக்கு மேலாகப் பதவி நீட்டிப்பில் தொடர்கிறார். அதிகார இடத்தில் அவர் தொடர்வது தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு விசாரணைகளை அதுவும் அவற்றில் பல குற்றச்சாட்டுகள் அவருக்கு எதிரானவை என்றபோது அவ்விசாரணைகளை நிச்சயமாகப் பாதிக்கும். உயர் அதிகாரப் பொறுப்பில் இருக்கும் ஒருவரது அத்தகைய நடத்தை மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஒன்று போலவே பாதிக்கவே செய்யும். அக்கறையுள்ள சமூகத்தின் பல பிரிவுகளின் குடிமக்கள் அவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

குர்மீத் சிங்கைப் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவியிலிருந்து நீக்குமாறு, நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

## அனைத்து தொழிற்சங்கங்களின்

# பெருந்திரள் அமர்வில் பங்கேற்ற 25,000க்கும் மேற்பட்டோருக்கு நன்றி!

### போராட்டங்களை தொடர்வோம்! அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டறிக்கை

மோடி அரசின் புதிய தாராளமயக் கொள்கைக்கு மாற்றாக, 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, மோடி அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் போராட்டமாக சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே நடைபெற்ற பெருந்திரள் அமர்வில் 25,000 க்கும் அதிகமாக, பேரார்வத்தோடு குறித்த நேரத்திற்கு முன்பாகவே வந்து கலந்து கொண்ட தொழிலாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

மாவட்ட மாநாடுகள், மாநில மாநாடு, தொழில் ரீதியிலான மாநாடுகள் நடத்தி, மக்களிடமும், தொழிலாளர்களிடமும் விரிவான பரப்புரையும் மேற்கொண்டு ஏற்றுக்கொண்ட கடமையை செவ்வனே நிறைவேற்ற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

இந்த வெற்றிக்காக உழைத்த அனைத்து தொழிற்சங்கங்களின் மாவட்ட நிர்வாகிகள், சங்க நிர்வாகிகள், துறை சார்ந்த சம்மேளன நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

2024 ஆம் ஆண்டு ஒன்றிய மோடி ஆட்சியை வீழ்த்துவது நமது இலக்கு. ஆண்டு முழுவதும் ஒருங்கிணைந்த போராட்டங்களின் ஆண்டாக உச்ச நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என தொழிலாளர்களின் தேசிய மாநாடு அறைகூவல் விடுத்தது.

இதற்கிசைவாக சம்யுக்த கிஷான் மோர்ச்சா உடன் இணைந்து ஆகஸ்ட் 24 அன்று புது டெல்லியில் கூடி திட்டமிட்டு அடுத்தகட்ட போராட்டங்களை அறிவிக்க உள்ளார்கள். விவசாயிகளும், தொழிலாளர்களும் இணைந்து ஒன்றிய மோடி ஆட்சியை வெளியேற்ற தொடர்ந்து பயணிப்போம். வெற்றி நமதே!

# சாதி வெறி அமைப்புகளை தடை செய்யவேண்டும்

### இளைஞர் பெருமன்றம் வலியுறுத்தல்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் க.பாரதி வெளியிட்டுள்ள அறிக்கை:

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் பட்டியலின, மாணவர் சின்னதுரையின் வீடு புகுந்து கொலைவெறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, அதிர்ச்சியளிக்கிறது.

நாங்குநேரி குற்றவாளிகள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியரும், மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் இந்த வன்கொடுமை தொடர்பான அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும்.

படுகாயமடைந்துள்ள சின்னதுரை முழுமையாக குணமடையும் வரை முறையான தரமான சிகிச்சை பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். சின்னதுரை முழுமையாக குணமடைந்த பின், அவரது கல்விக்கான முழு பொறுப்பையும் தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டும்.

படுகாயமடைந்துள்ள சின்னதுரை சகோதரி குணமடைவதற்கும், பின்னர் முறையான கல்வி பெறுவதற்கும் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்நாட்டின் பள்ளிகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் அச்சமூட்டும் விதத்தில் நிலவுகிற சாதியாதிக்க வெறியை, அதன் வெளிப்பாடுகளை கட்டுப்படுத்தி முடிவுக்கு கொண்டு வர போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

சக மாணவரையே தாக்குதல் நடத்துகிற அளவுக்கு சாதிவெறி மாணவர்கள் மத்தியில் நிலவுவதற்கு மிக முக்கிய காரணம், சாதி அமைப்புகள், சாதியாக மக்களை அணிதிரட்ட மற்ற சாதியினர் குறித்து வெறுப்புணர்வை உருவாக்குவதே காரணமாகும்.

இத்தகைய நிலையில்தான் நாங்குனேரி பள்ளியில், சாதிவெறியோடு மாணவர்கள் சக மாணவனின் வீடுபுகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆகவே, தமிழ்நாட்டில் சாதி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்து கண்காணித்து சாதி வெறியோடு செயல்படும் அமைப்புகள் தடை செய்யவேண்டும் எனவும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுகொள்கிறது.

# நூல் நயம்

## அருந்ததியர் வாழும் வரலாறு




சமுதாயத்தின் கடைக்கோடியில் அழுத்தப்பட்ட சமூகங்களில் ஒன்று அருந்ததியர் சமூகம். இதன் சமூக பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள், திருமணம், திருவிழாக்கள் போன்றவற்றை பொது சமூகம் உணர்ந்து கொள்கிற வகையில். பல்வேறு தரவுகளை திரட்டி அருந்ததியர் வாழும் வரலாறு என்கிற இந் நூலை மாற்கு எழுதியுள்ளார். அருந்ததியர் வாழ்க்கை முறைகளை பொது சமூகம் அறிந்து கொள்கிற ஒரு வரலாற்று ஆவணம் எனவும் இதை சொல்லலாம்.

அருந்ததிய மக்களின் ஏழ்மை நிலையினை ஆதிக்க சாதியினர் எவ்வாறு தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதையும், அருந்ததிய மக்கள் ஏன் துப்புரவு தொழில் செய்ய நிர்பந்திக்கப்பட்டார்கள் என்பதையும் நூலாசிரியர் கோடிட்டு காட்டுகிறார். ஆதிக்க சாதியினர் அநியாயம் செய்த போது அதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்கவில்லை அருந்ததியர்கள். துணிந்து சென்று தட்டி கேட்டு, அநியாயம் செய்தவர்களை அடக்கினர். இதற்கு சிறந்த உதாரணம் மதுரை வீரன். அநியாயம் புரிந்த பிரமலைக்கள்ளர்களை துணிவுடன் போராடி மதுரை வீரன் அடக்கினார். அருந்ததியர் சமத்துவத்தை விரும்பினர். சாதி பாகுபாட்டை எதிர்த்தனர். சாதியை தக்கவைக்கும் அகமன முறையை எதிர்த்தனர். மதுரை வீரன் சக்கிலியர்களால் வளர்க்கப்பட்டார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

அருந்ததியர்களுக்கு தெய்வங்களை வழிபடுவது அன்றாட நடக்கும் ஒரு இயல்பான செயலாக உள்ளது. இறை நம்பிக்கை மிக அதிகமாக உள்ள இனம் என்று ஒன்று உள்ளது என்றால் அதை அருந்ததியர் இனம் என்று துணிந்து சொல்லலாம். அருந்ததியர்களின் வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் இது வெளிப்படுகிறது. கருவுற்றல், குழந்தை பிறப்பு, முடி எடுத்தல், பூப்பெய்தல், திருமணம், இறப்பு என்று வாழ்வின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் இந்த இறை நம்பிக்கை வெளிப்படுகிறது. குல தெய்வங்களை வழிபடுதல், பொங்கல் கொண்டாடுதல் என்று உறவினர்களோடும், தங்கள் இன மக்களோடும் தெய்வங்களை வழிபடுகின்றனர். இப்பொழுதும் ஒரு கூட்டு வாழ்க்கை முறையினை பேணுகின்றனர் என்பதை அறிய முடிகிறது. இது போன்று இன்னும் பல செய்திகள் அடங்கியுள்ளது இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

**– இன்சுவை பாரதி**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : மாற்கு | |
| பக்கம் | : 404 | விலை : 560 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 | |

## அடிப்படை மாற்றங்களை நோக்கி




இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் தான் உள்ளது என்றார் மகாத்மா காந்தி அடிகள். கிராமங்களில் இருந்து தான் நாம் அடிப்படை மாற்றங்களை உருவாக்க முடியும். அதற்கான பயணத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ள முனைவர் க. பழனித்துரை அவர்கள் எழுதிய அடிப்படை மாற்றங்களை நோக்கி என்கிற இந்நூல் மிக சிறந்த விவரங்களை கொண்டுள்ள நூல்.

இந்திய விடுதலை பெற்று 75 ஆண்டுகளை கடந்து விட்டோம். ஆனாலும், மக்களிடத்தில் ஏற்றத்தாழ்வுகளும், வித்தியாசங்களும் இருக்கிறது. இந்த 75 ஆண்டுச் செயல்பாட்டில் மக்கள் தங்களை அதிகார படுத்திக் கொண்டு, அரசை தங்கள் மேம்பாட்டிற்கு செயல்பட வைக்காமல், அரசு தரும் திட்டங்களை பெறும் திட்ட பயனாளிகளாக சுருங்கியதன் விளைவு, பங்கேற்பு மக்களாட்சிக்கு தயாராகி இருக்க வேண்டிய பொதுமக்கள். பயனாளி பட்டாளமாக தயாரிக்கப்பட்டு விட்டனர்.

அரசாங்கம் மக்கள் மேம்பாட்டிற்கு திட்டம் இயற்ற மறக்கவில்லை. நிதி ஒதுக்கத் தவறவில்லை. செயல்படுத்த மறுக்கவில்லை. இருந்தும் ஏன் இந்த நிலை நம் நாட்டிற்கு? வருகின்ற ஆய்வறிக்கைகள் அத்தனையும் கூறுவது ஒன்றை தான். அரசாங்கத்தின் திட்டங்கள் மக்கள் தேவைகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படவில்லை.

பொதுமக்கள் ஆளுகையிலோ, மேம்பாட்டு செயல்பாடுகளிலோ, அரசின் நிர்வாகத்திலோ, பங்காளர்களாகவோ, பங்குதாரராகவோ, பங்காளிகளாகவோ செயல்படாமல், வெற்று பார்வையாளர்களாக, பயனாளிகளாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களும் அப்படி வாழ்வதில் ஒரு சுகம் கண்டனர். இதன் விளைவு, அனைத்தும் தரகர்களான கட்சிப் பிரமுகர்களிடம் சிக்கிக் கொண்டன. மக்களுக்கும், அரசுக்கும் பெரும் இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இதன் விளைவாக அரசாங்க அதிகாரிகளும், அலுவலர்களும் மக்கள் சேவையர் என்ற மனோபத்தை மறந்து, மக்களை மேய்க்க கற்றுக் கொண்டு, அதிகாரத்தில் இருப்பவர் இடுகின்ற ஆணைகளுக்கு செயல்படும் மனிதர்களாக மாறிவிட்டனர். இதனால்தான் அதிகாரத்திலிருந்து எளிய மனிதர்கள் தள்ளி வைக்கப்படுகின்றனர். இவற்றை சரி செய்ய வேண்டுமென்றால், நாமும் அரசின் பங்குதாரர்கள் என்ற மனோபாவத்தை பொதுமக்களிடமும், எளிய மனிதர்களிடமும் முதலில் ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் தான் ஒரு மாற்றத்தை நம்மால் சமூகத்தில் ஏற்படுத்த முடியும்.

இதனால்தான் உள்ளாட்சி அமைப்புகளை, தலைமையை மையப்படுத்தி உருவாக்காமல், மக்களை மையப்படுத்தி அரசு உருவாக்கியுள்ளது என்பதையும் நாம் புரிந்து கொண்டு, அடுத்த கட்டத்திற்கு முன்னேற வேண்டும். அதன் மூலமே சமூகத்தில் மாற்றம் சாத்தியப்படும் என்பதை விரிவாக இந்நூலில் எழுதி உள்ளார். இந்நூல் சமூக மாற்றத்திற்கு அடிப்படையான கூறுகளை விளக்கும் ஒரு நல்ல நூல். அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

**–சமரன்**

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : க. பழனித்துரை | |
| பக்கம் | : 144 | விலை: 200 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 | |

குருநானக் கல்லூரி நிர்வாகத்தைக் கண்டித்து

# மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்!



அரசு நிர்ணயித்த கல்வி கட்டணம் 800 ரூபாயை விட பன்மடங்கு அதிகமாக 50 ஆயிரம் ரூபாய் வரை சென்னை குருநானக் கல்லூரி நிர்வாகம் வசூலித்து வருகிறது. இதைக் கண்டித்தும், பட்டியல் சமூக மாணவர்களுக்கு இலவசமாகவும், மற்றவர்களுக்கு ரூபாய் 50க்கு வழங்க வேண்டிய கல்லூரி விண்ணப்ப படிவத்தை ரூபாய் 300 முதல் 500 வரை விற்பனை செய்து மாணவர்களிடம் கொள்ளையடிக்கும் செயலை கண்டித்தும், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தென் சென்னை மாவட்ட குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட துணைச் செயலாளர் சே.அபிஷேக் தலைமை வகித்தார். தென் சென்னை மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன் தொடக்கவுரையாற்றினார்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் தென் சென்னை மாவட்ட செயலாளர் சி.கா.சம்பத், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் சீ. தினேஷ் சீரங்கராஜ் ஆகியோர் நிறைவு உரையாற்றினர்.

இறுதியாக மாணவர் பெருமன்றத்தின் தென் சென்னை மாவட்ட துணைத்தலைவர் வினோதா நன்றியுரை ஆற்றினார்.


சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோயிலில்

# தினமும் வழிபாடு நடத்த அனுமதிகோரி ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு முத்தாலம்மன் திடலில், சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலில் தினமும் வழிபாடு நடத்த அனுமதி அளிக்கக் கோரி பக்தசபா குழுக்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. முத்தாலம்மான் கோவில் பக்தசபா தலைவர் சுந்தரராஜபெருமாள் தலைமை வகித்தார். வியாபாரிகள் சங்க தலைவர் நடராஜன் முன்னிலை வகித்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி., தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ. உள்பட பலர் பேசினார்கள். பேரூராட்சி தலைவர் தவமணி பெரியசாமி, சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுப்பாண்டி எக்ஸ் எம்.எல்.ஏ., கூட்டுறவு பண்டகசாலை தலைவர் கோவிந்தன், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க சவுந்திரபாண்டியன், ஓம்சக்தி பக்தசபா தலைவர் லதா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

கட்சியின் மதுரை மாவட்டக் குழு உறுப்பினர்

# தோழர் ஜெ.ரவிவர்மா மறைவுக்கு இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டக் குழு உறுப்பினரும், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்டத்தலைவரும், மதுரை கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளருமான ஜெ.ரவிவர்மா (46) காலமானார். ஜெ. ரவிவர்மாவின் மறைவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டக் குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அவரது உற்றார் உறவினர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வினாடி - வினா விடைகள்

1. 1885 டிசம்பர் 28, ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஆங்கிலேயர்.
2. 1924 ஆம் ஆண்டு பெல்காம் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. சௌகத் உஸ்மானி, முசாபர் அகமது, நளினி குப்தா, எஸ்.ஏ.டாங்கே
4. சரோஜினி நாயுடு
5. சிம்பிர்ஸ்க் (simbirsk)
6. பாட்டாளிகள்

# ஈரோடு தெற்கு மாவட்டக் குழு சார்பில் நிதியளிப்பு பேரவைக் கூட்டம்

மாநில செயலாளர் இரா. முத்தரசன் பங்கேற்பு



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக்குழு சார்பில் நிதியளிப்பு பேரவைக் கூட்டம், ஈரோட்டில் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் ஏ. ஜ. கே. எஸ் மாநில துணைத் தலைவர் சி. எம். துளசிமணி தலைமையில் நடைபெற்றது.

இதில், மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார். அவரிடம் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டக் குழு சார்பில் கட்சி வளர்ச்சிக்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.

கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, கட்சியின் மூத்த தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன், முன்னாள் மாவட்ட செயலாளர் ஆர். திருநாவுக்கரசு, மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ். சின்னசாமி, எம். குணசேகரன் உள்ளிட்டோர் உரையாற்றினர். மாவட்டக்குழு உறுப்பினர் எஸ். பொன்னுசாமி, சென்னிமலை ஒன்றிய செயலாளர் எம். செங்கோட்டையன், கொடுமுடி ஒன்றிய செயலாளர் ஆர். ரணதிவேல், பெருந்துறை ஒன்றிய செயலாளர் வி. சி. செந்தில்குமார், மொடக்குறிச்சி ஒன்றிய அமைப்பாளர் யு. டி. மாதேஸ்வரன், ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி. கல்யாணசுந்தரம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பழூர் காவல் துறையினரை பணி நீக்கம் செய்ய வலியுறுத்தல்!

ரவுடிகளைப் போல் செயல்பட்ட தா. பழூர் காவல் துறையினரை பணி நீக்கம் செய்க! மாவட்ட காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் விஜயராகவன் அவர்களிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் மாவட்ட நிர்வாகிகள் நேரில் புகார் மனு அளித்தனர்.

ஜெயங்கொண்டத்திலிருந்து தா.பழூர், திருபுரந்தான் வழியாக முட்டுவாஞ்சேரி வந்து செல்லும் அரசின் 10 எண், 14 எண் மற்றும் 19 எண் கொண்ட டவுன் பஸ் பல மாதங்களாக சரியாக வருவதில்லை. இதனால் பொதுமக்கள், கல்லூரி மற்றும் பள்ளி பிள்ளைகள் பலர் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். இதனால் பல மணி நேரம் காத்திருந்த நிலையில் பொதுமக்கள் தா. பழூர் கடைவீதியில் சாலை மறியல் செய்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாவட்ட செயலாளரும் திருபுரந்தான் ஊராட்சி மன்ற தலைவருமான இரா. உலகநாதனும் கட்சி தோழர்களுடன் மறியலில் பங்கு பெற்றார். மறியல் நடைபெற்ற இடத்திற்கு வந்த காவல் இராஜேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜா, காவலர் மணி ஆகியோர் மறியலில் ஈடுபட்ட பெண்களை அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் வசைபாடியதோடு, அத்துமீறி சி.விஜயசாரதி, சி.சாந்தி ஆகிய பெண்களை சரமாரியாக கன்னத்தில் ஓங்கி அடித்துள்ளார் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன். உதவி ஆய்வாளர் ராஜா தரக்குறைவாக கம்யூனிஸ்ட் கட்சியை குறிப்பிட்டு சமூக விரோதிகளைப் போல் தா. பழூர் காவல்துறையினர் நடந்து கொண்டுள்ளனர். மேலே குறிப்பிட்டுள்ள காவல் துறையினரை உடனடியாக பணி நீக்கம் செய்து கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கைது செய்த 11 பேர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கை திரும்ப பெற வேண்டும் என்றும் வலியுறுத்தி அரியலூரில் மாவட்ட காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் விஜயராகவன் அவர்களிடம் நேரில் புகார் மனு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அளிக்கப்பட்டது.

# உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி காவிரியில் நீர் திறக்ககோரி மறியல் போராட்டம்




டெல்டா மாவட்டங்களில் கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி தண்ணீர் உடனடியாக திறக்கப்பட வேண்டி ஒன்றிய அரசை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தஞ்சாவூர், திருவாரூர், நாகை ,மயிலாடுதுறை, கடலூர், புதுக்கோட்டை, திருச்சி, அரியலூர் உள்ளிட்ட காவிரி டெல்டா ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது.


இந்த போராட்டத்தை யொட்டி தஞ்சாவூரில் நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமை வகித்தார். போராட்டத்தில் மாவட்ட மாவட்ட நிர்வாகிகள் ஜி. கிருஷ்ணன், வெ. சேவையா, ம.விஜயலட்சுமி, ஆர். இராமச்சந்திரன், ஆர். பிரபாகர், ஆர். கே. செல்வகுமார், ஆர். ஆர். முகில் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று கைதாகினர்.

கும்பகோணத்தில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கருகிய நெற்பயிர்களுடன் ஊர்வலமாக வந்து அஞ்சலகம் முன்பு மறியல் போராட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி தலைமையில் நடைபெற்றது. பாபநாசத்தில் நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு வடக்கு மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர். தில்லைவனம் தலைமை வகித்தார்.

காவிரி நீரை திறக்க கோரி ஆர்ப்பாட்டம் குறுவை சாகுபடிக்கு தேவையான காவிரி நீரை திறந்து விட வேண்டியும், தண்ணீர் இல்லாமல் கருகிய பயிர்களுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.35 ஆயிரம் வழங்க வேண்டுமென வலியுறுத்தி திருக்குவளையிலுள்ள தபால் நிலையம் முன்பு கட்சியின் மாநில குழு உறுப்பினரும், ஒன்றிய கவுன்சிலருமான டி. செல்வம் தலைமையில் பேரணியாக வந்து தபால் நிலையத்தை முற்றுகை யிட முயன்றனர்.

இதில் விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் வீ. சுப்பிரமணியன், கட்சியின் ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர்கள் டி. கண்ணையன், ஏ. இராமலிங்கம், டி. பாலாஜி, ஒன்றிய துணை செயலாளர் வீ. எஸ். மாசேதுங், விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய தலைவர் எஸ். பக்கிரிசாமி, ஏஐடியுசி மாவட்ட பொறுப்பாளர் எஸ். சிவதாஸ், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட துணை செயலாளர் எஸ். ரமேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கவிஞர் வாய்மைநாதன் மறைவுக்கு இரங்கல்



தமிழ்நாட்டின் முன்னணி படைப்பாளரான கவிஞர் வாய்மைநாதன் (87), அவரது சொந்த ஊரான வாய்மேட்டில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வேதனை அடைந்தோம்.

கவிஞர் வாய்மைநாதன் நல்ல ஆசிரியர். உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். நல்ல படைப்பாளி, சுபாஷ் சந்திர போஸ், களப்பால் குப்பு (எ) கே. குப்புசாமி போன்ற சமூக விடுதலைப் போராட்ட வீரர்கள் வரலாறு உட்பட பல நூல்களை எழுதியுள்ளார்.

இடதுசாரி இயக்கங்களுடன் நெருக்கமான உறவில் இருந்தவர். குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது பற்றும், பாசமும் காட்டி கடைசி வரை பயணித்தவர்.

அன்னாரின் மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இவரது வாழ்க்கை இணையர் சில ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி விட்டார். இவர்களுக்கு வழக்கறிஞர், ஆர்.முருகபாரதி, வேளாண்மை துறையில் பணியாற்றும் ஆர்.ஜீவானந்தம் ஆகிய இரு மகன்களும், ஆசிரியர் பணியில் உள்ள தமிழ் கோதை என்ற மகளும் இருக்கின்றனர்.

கவிஞர் வாய்மைநாதன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# புலவர் செ.ராசு மறைவுக்கு இரங்கல்

புலவர் செ.ராசு மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கல்வெட்டு அறிஞரும், தொல்லியல் ஆய்வாளருமான புலவர் செ.ராசு (85) மருந்துவமனையில் அனுமதிக்கப் பெற்றிருந்த நிலையில், காலமானார் என்ற செய்தி அறிந்து வேதனையடைந்தோம்

புலவர் செ.ராசு தமிழாசிரியர் பணியில் தொடங்கி, தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாற்றும் பேராசிரியராக உயர்ந்தவர். கொங்கு நாட்டு வரலாற்றில் சமண சமயம் என்ற தலைப்பில் ஆய்வு செய்து, முனைவர் பட்டம் பெற்றவர்.

கல்வெட்டு, செப்பேடு, ஓலைப் பட்டயம், சுவடிகள் தேடி பெற்று ஆய்ந்து வந்தவர். தொல்லியல் துறை இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

அவரது ஆய்வில் உருவான நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களும், நூற்றுக்கணக்காக கட்டுரைகளும் நீண்ட பல காலம் இளைய தலைமுறை ஆய்வாளர்களுக்கு கைவிளக்காக விளங்கும். அறச்சலூர் மலையில் இசைக் கல்வெட்டு இருப்பதை கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தது இவரது தனிச் சிறப்பான பணியாகும். புலவர் செ.ராசுவின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், ஆய்வுலக நண்பர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா முத்தரசன் கூறியுள்ளார்.

### கோவை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளை

# தனியாருக்கு வழங்குவதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு

கோவை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியாருக்கு தாரைவாக்கும் முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தப் பொருள் குறித்து கோவை மாமன்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இதில் கருத்து தெரிவித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாமன்ற குழு தலைவர் மல்லிகா புருஷோத்தமன் தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு வழங்குவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கவில்லை.

ஏனெனில், நிரந்தர தன்மை உள்ள வேலைகளை நிரந்தர தொழிலாளர்களைக் கொண்டு செய்ய வேண்டும் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையாகும்.

ஒன்றிய பிஜேபி அரசின் தவறான தொழிலாளர் விரோதக் கொள்கையை அரசியல் ரீதியில் எதிர்த்துப் போராடும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ்நாட்டில் அந்த கொள்கைகளை அமுல்படுத்த முயற்சிப்பது முரண்பாடாக உள்ளது.

தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரந்தர தன்மை உள்ளவையாகும். மேற்படி பணி இடங்களில் முழுவதுமாக வெளி ஆட்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படுமானால் ஒரு லட்சம் குடும்பங்கள், பெரும் துன்பத்திற்கு ஆளாவார்கள் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

நிலம், நீர், கட்டடம், மின்சாரம், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துகிற வாகனங்கள், அந்த வாகனங்கள் சுமக்கும் பெட்டிகள் அனைத்தும் மாநகராட்சியின் வரிப்பணத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய உள்கட்டமைப்பு வசதிகளை 170 கோடி ரூபாய் நமது பணத்தை தனியாருக்கு கொடுப்பது நியாயமா? இச்செயல் மாநகராட்சியுடைய செலவினங்களை அதிகப்படுத்துவதாகும் என்பதை பதிவு செய்கிறேன்" என்றும் மாமன்ற உறுப்பினர் பேசினார்.

### கோவை மாவட்ட மில் தொழிலாளர் சங்கத்தின் சார்பில்

# இலவச கண் சிகிச்சை முகாம்

கோவை மாவட்ட மில் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இந்த கண் சிகிச்சை முகாமை சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ். எம். எல். ஏ. துவக்கி வைத்தார்.

சங்கத்தின் செயலாளர் சி. சிவசாமி, சி. தங்கவேல், அலுவலக பொறுப்பாளர் பூபதி, உடுமலை செல்வராஜ், திருப்பூர் கோபால், வி. ஆர். பாண்டியன், ராமமூர்த்தி, மு. வ. கல்யாணசுந்தரம், எஸ். ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கமும், டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்திய இந்த கண் சிகிச்சை முகாமில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். கண் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாக சிகிச்சையும், கண்ணாடிகளும் வழங்கப்பட்டது.

# வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்



விதவை, முதியோர் மற்றும் இன்னும் பிற உதவி பெறும் சான்றுகளுக்கு இழுத்தடிக்கும் அதிகாரிகள் மீது மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலிறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றிய குழு சார்பில், ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஒன்றிய செயலாளர் பா. பிச்சைமணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் க. முனீஸ்வரன் முன்னிலை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் வே. பரமேஸ்வரன் துவக்க உரையாற்றினார். மாவட்ட செயலாளர் கி. பெருமாள் முடிவுரையாற்றினார். மேலும் ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் பொறுப்பாளர்கள், பொதுமக்கள் என 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஏங்கல்ஸ் நினைவு தினம்

ஏங்கல்ஸ் நினைவுதினம் இடதுசாரி கட்சிகள் இணைந்து செங்கல்பட்டு நகரில் மார்க்சிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில், பாட்டாளி வர்க்க சமரன் அணி ஒருங்கிணைப்பாளர் மணி தலைமையில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ஜீ. ஆர். ரவிந்திரநாத், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் மாநில குழு உறுப்பினர் சித்தன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் ஏ. ராஜ்குமார், மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பாரதி அண்ணா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி முருகன், பட்டாளி வர்க்க சமரன் அணி கார்த்திக்கேயன் மற்றும் இடதுசாரி முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

# தூய்மை பணியாளர்கள் சங்கம் தொடக்கம்

தென்காசி மாவட்டம், ராயகிரி பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஏஐடியூசி தொழிற்சங்கத்தில் இணைந்தார்கள். புதிய நிர்வாகிகளாக தலைவர் சந்திரன், செயலாளர் ஞானேந்திரன், பொருளாளர் முத்துச்செல்வன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்! ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் டி. சுப்பையா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர். சமுத்திரக்கனி ஆகியோர் உரையாற்றினார்கள்.

### மணிப்பூர் கொடுமைக்கு நீதி கேட்டு

# மாதர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பாண்டிச்செலவி தலைமை வகித்தார். முத்துலட்சுமி முன்னிலை வகித்தார். ஏராளமான பெண்கள் கலந்து கொண்டார்கள்.

# சுதந்திர தின விழா மரக்கன்றுகள் நடப்பட்டன

தென்காசி மாவட்டம் சிவகிரியில் நாட்டின் 76வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தியாகி தோழர். சுடலைமுத்து நினைவாக சிவகிரி அரசு மருத்துவமனையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 76 மரக்கன்றுகள் நடப்பட்டன!

# ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் பி.எஃப் பணத்தை வழங்குக!

**ஓய்வுபெற்ற பஞ்சாலை தொழிலாளர் பேரவை வலியுறுத்தல்**

மதுரை விசாலாட்சி மில் ஓய்வுபெற்ற பஞ்சாலை தொழிலாளர்களின் சிறப்பு பேரவை கூட்டம் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற பஞ்சாலை தொழிலாளர்களின் நிலுவையில் உள்ள ஈ.பி.எஃப் பணம், மில் தொழிலாளர்கள் வசிக்கும் வீட்டுமனை வழங்க வேண்டும்.

ஓய்வுபெற்ற பஞ்சாலை சங்கத்தின் தலைவராக ராமு, செயலாளராக கே. எஸ். மணி, பொருளாளராக ராஜராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த சிறப்பு பேரவை கூட்டத்தில் மதுரை மாவட்ட ஏஐடியூசி செயலாளரான கே. சேது, பஞ்சாலை சங்க செயலாளர் இரா. முருகன், செல்வமுத்துகுமார் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

## இந்த வார தம்பிக்குறள்

### 127. சென்றவை திரும்பா

**சென்றவை யாவும் திரும்பூஉம் என்ப**
**திரித்தெண்ணும் எண்ணத் தவர்.**

திரித்துக் கூறும், தீய அறிவு படைத்தவர்கள் தாம், சென்றவை திரும்பும் என்பர். (காலம் கண்கூடான ஒன்று. பலவும் இவ்வாறே எனக் கொள்க).

**சென்றவை யாவும் திரும்புமென்றால் சென்ற**
**இளமை திரும்பூஉம் கொல்.**

கழிந்து போனவை மீண்டும் திரும்பிவரும் என்றால், ஒவ்வொருவருக்கும் சென்றுவிட்ட இளமைக்காலம் திரும்புமா? திரும்பாது (இதைக் கண்டே உணர்க. இளமையும் நில்லா யாக்கையும் நில்லா மணிமேகலை).

சுழலும் உலகம்

## இனவெறியை தூண்டும் துனிசிய ஜனாதிபதி

# பாலைவனத்தில் படுகொலையாகும் ஆப்பிரிக்க மக்கள்




ஆப்பிரிக்காவில் இருந்து குடியேறிய கறுப்பினத்தவர்களால் துனிசியாவில் மக்கள்தொகை அதிகரிக்கின்றது என்றும் அவர்கள் இன கலப்பை ஏற்படுத்தி துனிசியாவை "முழுமையான ஆப்பிரிக்க" நாடாக மாற்றிக் கொண்டு உள்ளனர் என்றும் வன்முறை மற்றும் குற்றச்சம்பவங்களுக்கு புலம்பெயர்ந்தவர்களே காரணம் என்றும் பாசிஸ்ட்டுகளின் மரபு மாறாமல் கூறி துனிசிய ஜனாதிபதி கைஸ் சையத் நாட்டிற்குள் இன வெறியை தூண்டி விட்டுள்ளார்.

துனிசியாவில் உள்ள ஸ்ஃபாக்ஸ் கடலோர நகரில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு உப சஹாரா ஆப்பிரிக்கா மக்கள் புலம் பெயர்ந்து செல்கின்றனர். அதாவது மத்திய தரைக்கடலை இங்கிருந்து கடக்கின்றனர்.இதன் காரணமாக சில ஆயிரம் உப சஹாரா ஆப்பிரிக்க மக்கள் அங்கு புலம் பெயர்ந்து வந்துள்ளனர்.அவர்களுக்கு எதிராக தான் இந்த இனவெறி தாக்குதலை தொடுத்து வருகிறார் துனிசிய அதிபர்.

கடந்த 38 ஆண்டுகளில் இல்லாதவகையில் துனிசியாவின் பணவீக்கம் 8.3 சதவிகிதம் அதி கரித்து மக்கள் வாழமுடியாத மிக மோசமான சூழலை எதிர் கொண்டு வருகின்றனர்.வேலை வாய்ப்பு சதவீதமும் அதலபாதாளத்திற்கு சரிந்துள்ளது. இவ்வாறு மோசமடைந்து வரும் உள்கட்டமைப்பு மற்றும் பொது சேவைகள், அடிப்படை விநியோக பற்றாக்குறை, அதி கரித்து அரச பயங்கரவாதம், வறட்சி மற்றும் காட்டுத்தீ மற்றும் உலகப் பொருளாதார அமைப்பில் துனிசியாவின் துணைப் பங்கு என நாடு எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சனைகளில் இருந்து துனிசிய மக்களை திசை திருப்பும் வகையில் மக்கள் நலன் காக்காமல் ஆப்பிரிக்க மக்களுக்கு எதிராக பிரிவினைவாதத்தை தூண்டி விட்டதோடு எதிர்க்கட்சிகள் மற்றும் ஊடகங்கள் மீதும் கெடுபிடி தாக்குதலை தொடுத்து துனிசியாவின் நெருக்கடியை மறைத்து வருகிறார்.

### கடல் தண்ணீரை பருகும் கொடுமை

துனிசிய இராணுவம் இனவெறியோடு ஆப்பிரிக்க மக்களை லிபியா மற்றும் அல்ஜீரிய எல்லையில் உள்ள பாலைவனத்தில் தள்ளி விடுகிறது. அதன் பிறகு அம்மக்கள் 110 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பத்தில் தண்ணீர் உணவு ஏதும் இன்றி பல நாட்கள் பாலைவனத்தின் கடும் வெயிலில் நடந்து லிபியாவிற்குள் செல்லும் அவர்களுக்கு சில தனிநபர்களால் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இந்த உதவியை கூட துனிசியா செய்ய முன் வரவில்லை என்றும் தப்பி பிழைத்த மக்கள் தெரிவிக்கின்றனர்.இதே போல மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பா செல்லும் மக்கள் கடல் தண்ணீரை பருகும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

ஆகஸ்ட் 9 ஆம் தேதி மட்டும் பாலைவனத் தில் தாங்க முடியாத வெப்பத்தால் மரணம் அடைந்த குழந்தைகள் உட்பட 27 நபர்களின் சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. தினமும் 150 பேர் பாலைவனத்தை கடந்து லிபியாவிற்குள் வருவதாக லிபிய நாளிதழ்கள் தெரிவித்துள்ளன. அதிபர் சையத் தூண்டிவிட்ட இனவெறியால் பலநூறு பேர் நாள்தோறும் பாலைவனத்தில் கொடூரமாக கொலையாக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் பாதி உயிரோடு பாலைவனத்தை கடக்கும் ஆப்பிரிக்க மக்கள் இரு நாட்டு ராணு வத்திடமும் பாலியல் வன்கொடுமைகள், தாக்கு தல்கள் என கொடூரமான தாக்குதல்களை எதிர் கொண்டு வருகின்றனர். துனிசிய ராணுவ வீரர்கள் கம்பியால் ஒரு பெண்ணின் முகத்தை தாக்கி அவரது அனைத்துப் பற்களையும் பிடுங்கி உள்ளனர் என பாலைவனத்தை கடக்கும் பொது மக்கள் எதிர் கொள்ளும் அடக்கு முறைகளை அல் ஜஸீரா செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

துனிசியாவில் உள்ள முற்போக்கு மற்றும் இடதுசாரி குழுக்கள் ஜனாதிபதியின் இனவெறி நடவடிக்கைக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஆனால் புலம்பெயர்ந் தோரை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான கொள்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இதனால், துனிசியாவில் தங்கி இருந்த புலம்பெயர்ந்தோரும் கடலைக் கடந்து ஐரோப்பா வுக்குள் நுழைய முயலும் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

# ஈக்வடார் அதிபர் வேட்பாளர் பெர்னாண்டோ படுகொலை

ஈக்வடார் நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும் ஈக்வடார் அதிபர் வேட்பாளருமான பெர்னாண்டோ விலாவிசென்சியோ, நாட்டின் தலைநகரான குய்டோ வில் தேர்தல் பிரச்சாரத்தை முடித்து விட்டு திரும்பும் வேளையில் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டார்.

ஆகஸ்ட் 20 ல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருக்கும் நிலையில் இந்த கொலை ஈக்வடாரில் தேசிய அவசர நிலையாக மாறியுள்ளது. தேர்தலையொட்டி நடைபெற்ற அனைத்து கருத்து கணிப்புகளிலும் முதல் 4 அல்லது 5 ஆவது இடத்தை பிடித்து வந்த பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தணிக்கை ஆணையத்தை வழிநடத்துபவராக இருந்துள்ளார். மேலும் ஆணையத்தின் தணிக்கை முன்னாள் அதிபர் கில்லர்மோ லாசோவுக்கு எதிரான குற்றச்சாட்டு விசாரணையை விரைவு படுத்துவதற்கு சாதகமான அறிக்கையை வழங்கியுள்ளது.

ஈக்வடாரை சுரண்டும் எண்ணெய் சுரங்க நிறுவனங்களின் ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் போதைப் பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அதிரடியாக குரல் எழுப்பி வந்தார். இதனால் அதிபர் தேர்தலில் அதிகம் பேசப்பட்ட நபராக வலம் வந்தார் பெர்னாண்டோ. தேசிய மற்றும் சர்வதேச போதை பொருள் கடத்துபவர்களிடம் இருந்தும் கொலை மிரட்டல்களை எதிர் கொண்ட அவர் கொல்லப்படுவதற்கு தனக்கு கொலை மிரட்டல் வந்தது என அட்டர்னி ஜெனரல் அலுவலகத்திலும் தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்திற்கு முன்பாக நாட்டின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான மாண்டா நகரின் 38 வயதான மேயர் அகஸ்டின் இட்ரியாகோ படுகொலை செய்யப்பட்டார்.ஜூலை 17 அன்று நாடாளுமன்ற வேட்பாளரான ரைடர் சான்செஸ், எஸ்மரால்டாஸின் குயின்டேவில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

# எம்62 அமைப்பு அல்ல; மக்கள் இயக்கம் மேற்கு ஆப்பிரிக்காவில் நடப்பது என்ன?

நைஜரின் புதிய ராணுவ ஆட்சியாளர்கள் தங்களை ஒரு 'புரட்சிகர அரசு' என்று அறிவித்து 21 பேர் கொண்ட அமைச்சரவையையும் நியமித்துள்ளனர். அந்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக பிரான்சின் கைப்பாவை அல்லாத அரசு அமைந்திருக்கிறது என்று மீண்டும் பொது மக்கள் வீதிகளில் வந்து உற்சாகக் கொண்டாட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

அதிகாரத்திலிருந்து ராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி முகமது பஜூமை மீண்டும் ஆட்சியில் அமர்த்தாவிட்டால் போர் தொடுக்க நேரிடும் என்று பிரான்சின் குரலை எதிரொலித்தது 'மேற்கு ஆப்பிரிக்க பொருளாதாரக் கூட்ட மைப்பு' எனும் மேற்கத்திய ஆதரவு அமைப்பு. ஆனால் அதற்கு செவிசாய்க்க முடியாது என நைஜரின் புதிய ஆட்சியாளர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து என்ன செய்வது என்று தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தன பிரான்சும் அதன் தொங்கு சதையான மேற்கண்ட அமைப்பும்.

### நைஜீரியாவில் எதிர்ப்பு

நைஜீரியாவின் ஜனாதிபதி போலா தினுபு, நைஜர் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற பிரான்சின் திட்டத்தை, நைஜீரிய நாடாளுமன்ற செனட் சபையில் முன் வைத்திருக்கிறார். நைஜர் மீது ராணுவத் தாக்குதல் நடத்தும் திட்டத்திற்கு நைஜீரியா ஒரு போதும் ஒப்புக் கொள்ளாது என ஜனாதிபதியைத் தவிர அனைத்து உறுப்பினர்களும் கடுமையாக பேசியிருக்கிறார்கள்.

மேற்கு ஆப்பிரிக்க பொருளாதார கூட்டமைப்பு ஈகோவாஸ் அமைப்பில் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள 15 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் பரப்பளவில் 60சதவீதத் திற்கும் அதிகமாக உள்ள மாலி, நைஜர், கினி மற்றும் புர்கினோ பாசோ ஆகிய நாடுகளில் ராணுவங்களில் உள்ள புரட்சிகரக் குழுக்கள், பிரான்ஸ் ஏகாதிபத்திய கைக்கூலி களுக்கு எதிராக கிளர்ச்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றிய காரணத்தால், ஈகோவாஸ் அமைப்பிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டுள் ளன. எஞ்சியுள்ள 11 நாடுகளின் பிரதிநிதிகள் தான், பிரான்சின் உத்தரவைக் கேட்டிருக்கிறார்கள். உடனடியாக ராணுவத் தாக்குதல் நடத்துமாறு பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் உத்தரவு பிறப்பித்துள்ளார். சுதந்திர நாடுகள் ஆன போதிலும் இன்னும் பிரான்சிடம் உத்தரவு கேட்கும் அடிமைத்தனத்திற்கு இந்த நாடுகளிலேயே தற்போது கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

### நைஜர் மீது கை வைக்காதே!

நைஜீரியாவின் செனட் உறுப்பினர்கள் பதிலடி கொடுத்தது போலவே பெனின் ஜனாதிபதிக்கும் பெனின் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட தொழிலாளர் இயக்கங்கள், நைஜர் மீது கைவைக்காதே என்று கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள், தொழிலாளர் இயக்கங்கள், நைஜர் மீது ராணுவத் தாக்குதல் நடத்தும் ஏகாதிபத்திய அச்சுறுத்த லை ஒரு போதும் ஏற்க முடியாது என்றும், தற்போது ஏற்பட்டுள்ள மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் இளைஞர்களது எழுச்சிகர உணர்வுகளைக் கருத்தில் கொள்ளாமல் ராணுவத் தாக்குதல் என்ற தவறை ஏகாதிபத்திய சக்திகள் செய்யுமானால் மிகக் கடுமையான பதிலடியை எதிர்கொள்ள நேரிடும் என்றும், ஆப்பிரிக்க கண்டம் முழுவதும் ஏகாதிபத்தியத்திற்கும் அதன் கைக்கூலிகளுக்கும் மிகப்பெரிய பாடம் கற்பிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கென்யா கம்யூனிஸ்ட் கட்சி, மொரோக்கோ தொழிலாளர் கட்சி உள்ளிட்ட இயக்கங்கள் இத்தகைய அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### பிரான்ஸ் ராணுவமே, வெளியேறு!

அப்படித்தான் 2021 ஏப்ரலில் பிரான்ஸ் ஆதரவாளரான முகமது பஜூம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்தார். மிகப் பெரிய ஜனநாயகவாதி என்று பிரான்ஸ் எஜமானர்களால் புகழப்பட்ட பஜூம், அதிகாரத்திற்கு வந்த உடனே இணைய தள தடை யை அறிவித்தார். இளைஞர்களின் போராட்டங்களின் மீது கொடூரமான தாக்குதல்களை ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டுள்ளார். அங்கு தொடர்ந்து நடக்கும் போராட்டங்களில் முக்கியமானது, ராணுவ முகாம்களைத் தாண்டி நகருக்குள் பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ராணுவத் துருப்புக்கள் வரக் கூடாது என்பதற்கான இயக்கங்களே.

இந்த நிலையில் 2022ல் அண்டை நாடான மாலியில் பிரான்ஸ் ராணுவத்தினருக்கு எதிராகவும் பிரான்ஸ் ஆதரவு ஆட்சியாளருக்கு எதிராகவும் ராணுவக் கிளர்ச்சி நடந்த பின்னணியில், அங்கு ஒடுக்குமுறையை நிகழ்த்தும் நோக்கத்துடன் ஆப்பிரிக்க கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஐவரி கோஸ்ட் வழியாக மாலிக்கு செல்வதற்காக பிரான்ஸ் ராணுவப் படைகள் நைஜருக்குள் நுழைந்தன. நைஜர் இளைஞர்கள் கொதித் தெழுந்தனர். எங்கள் நாட்டின் வழியாக பிரான்ஸ் படைகள், மாலியில் உள்ள எங்களது சகோதரர்களை ஒடுக்குவதற்கு செல்ல அனுமதியோம் என்று பெரும் போராட்டத்தில் ஈடுபட்ட னர். அந்த இளைஞர்கள் மீது நைஜர் ஜனாதிபதியின் தனிப்படையினரும் பிரான்ஸ் ராணு வத்தினரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அதில் இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 18 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் நைஜர் மக்களிடையே ஆத்திரத்தையும் கொதிப்பையும் ஏற்படுத்தியது.

அதேவேளையில் மாலியில் ராணுவக் கிளர்ச்சியாளர்கள் மற்றும் மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக வேறு வழியின்றி அங்கிருந்து 2400 ராணுவத் துருப்புகளையும் திரும்பப்பெற்றுக்கொள்வதாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் அறிவித்தார். அப்போது அவர் சொன்னார்: "சாஹேல் பிரதேசத்தில் (மேற்கு ஆப்பிரிக்காவின் பெயர் சாஹேல்) இனி பிரான்ஸ் ராணுவத்தின் இதயமாக இருக்கப்போவது மாலி அல்ல; நைஜர்". இந்த வார்த்தைகள் நைஜர் மக்களை மேலும் கொதிப்படையச் செய்தன.

### அப்போது பிறந்தது 'எம் 62' (வி62) இயக்கம்.

2022 ஆகஸ்ட் இறுதியில் நைஜரின் 14 தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய 'நைஜர் தொழிற்சங்க கூட்டமைப்பு மற்றும் பல்வேறு தரப்புகளைச் சேர்ந்த 15 குடிமை அமைப்புகள் ஒன்றாக இணைந்து உதயமானது எம்62 இயக்கம். இதன் ஒற்றை முழக்க மாக எழுந்தது, "பிரான்ஸ் ராணுவமே, நைஜரிலிருந்து வெளியேறு!".

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு மாநில செயற்குழுவின்

# சுதந்திர தின வாழ்த்துக்கள்

77 வது சுதந்திர தின வாழ்த்துகள் தெரிவித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலனி ஆதிக்கத்தில் இருந்த நாட்டின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று 76 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. சுமார் 200 ஆண்டுகள் நீடித்த விடுதலைப் போராட்டத்தில், எண்ணிக்கையில் அடங்காத குடிமக்களும் போராடியுள்ளனர். சாதி, மதம் உள்ளிட்ட அனைத்து வேறுபாடுகளையும் தாண்டி, அன்னை நாட்டின் அடிமை நிலை நீங்க, ஒன்றுபட்டு நடந்த போராட்டம் வெற்றி கண்டது.

ஆங்கிலேய அரசு நாட்டு மக்களை மத அடையாளத்தில் பிளவுபடுத்தி, ஆட்சியை பாதுகாத்து கொள்ள முயன்றது. மகாத்மா காந்தியும், தேசிய விடுதலை இயக்கமும் மதச்சார்பின்மை கொள்கையை முன்னெடுத்து மகத்தான வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற ஜனநாயக முறையில் மக்களாட்சி உறுதி செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கி, மாநிலங்கள் இணைந்த இந்திய ஒன்றியம் கட்டமைக்கப்பட்டது. சுயசார்பு பொருளாதாரம் உருவாக பொதுத்துறைகள் உருவாக்கப்பட்டு, நாட்டின் இறையாண்மை நிலைநிறுத்தப்பட்டது.

1990 ஆம் ஆண்டுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையும், உலகமயப் பொருளாதாரத்தை ஏற்று, செய்யப்பட்ட கட்டமைப்பு சீர்திருத்தங்களும் அரசின் சலுகை சார் மூலதனமாக வளர்ந்தது. இதன் மூலம் பன்னாட்டு குழும நிறுவனங்கள் மற்றும், நிதி மூலதன சக்திகளும் அரசதிகாரத்தில் அழுத்தம் செலுத்தி வருகின்றன.

இவர்களது ஆதரவில் இந்துத்துவா அரசியல் கருத்தியல் கொண்ட பெரும்பான்மை மதவாத சக்திகள் அதிகாரத்தை கைப்பற்றி பத்தாண்டுகளாக ஆட்சியில் தொடர்கின்றன. இந்தச் சூழலில், 77வது சுதந்திர தினத்தில் நாட்டை பேராபத்து சூழ்ந்து நிற்கிறது.

நாட்டின் ஒற்றுமைக்கு ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கிய சிறப்பு தகுதி நீக்கப்பட்டதால், பிளவுபடுத்தப்பட்ட மாநிலமாக, நான்காண்டுகளாக ஜனநாயகம் மறுக்கப்பட்ட நிலையில் துடிதுடித்து வருகிறது.

அதானி அம்பானி உள்ளிட்ட உயர்தட்டு ஒரு சதவீத மில்லியனர்களிடம் நாட்டின் மொத்த செல்வத்தில் 40 சதவீதம் குவிந்து விட்டது. மறுபுறத்தில் வேலையின்மை, வருமான இழப்பு, தொழில் நெருக்கடி, விலைவாசி உயர்வு என கடுமையான சூழலுக்குள் பெரும்பகுதி மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் சட்ட உரிமைகள் பறிக்கப்பட்டும், விவசாயிகள் நலன்கள் புறக்கணிக்கப்பட்டும் வருகின்றன.

இந்துத்துவா மதவெறி சக்திகள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில், மணிப்பூர், அரியாணா, உத்தரப்பிரதேசம் உட்பட நாடு முழுவதும் வெறுப்பு அரசியலை விதைத்து, சிறுபான்மை மக்களின் நலனை பலியிடும் வன்மத்தில் மதவெறியை ஒருங்கிணைத்து தேர்தல் ஆதாயம் தேடும் மலிவான அரசியல் நிராகரிக்கப்பட வேண்டும்.

ஆளுநர் மாளிகைகளும், ஆளுநர்களும் ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிராக கலகங்களை ஏற்படுத்தும் சதி ஆலோசனை மையங்களாகவும், முகவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

பள்ளி மாணவர்களிடம் சாதிய உணர்வும், வெறியும் வெளிப்பட்டு வருவது சமூக நீதி கொள்கைக்கு சவாலாக எழுகிறது

இந்தச் சூழலில் நாட்டின் 77 வது சுதந்திர நாளில் இந்துத்துவா மதவாத சக்திகளை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றி, நாட்டையும், மக்களையும் பாதுகாப்போம் என உறுதியேற்று, நாட்டு மக்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.



◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைமை அலுவலகமான அஜய் பவனில் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.



◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில அலுவலகமான பாலன் இல்லத்தில், கட்சியின் மூத்த தலைவரும் விடுதலைப் போராட்ட வீரருமான இரா. நல்லகண்ணு அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் பேசிய அவர், மதவெறி பாஜகவை முறியடிக்க அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். நீட் தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும் இரா.நல்லகண்ணு வலியுறுத்தினார்.

## சுதந்திர தின விழா

### கோவை



நாட்டின் 77 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கோவை ஜீவா இல்லத்தில் தேசியக்கொடி ஏற்றி வைத்து நாட்டின் ஒருமைப்பாட்டையும், மதச்சார்பற்ற தன்மையையும் பாதுகாக்க உறுதி மொழி ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ் தலைமை தாங்கினார். மூத்த தோழர் வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் சி. சிவசாமி உறுதிமொழி வாசித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மாவட்ட துணை செயலாளர் எம். குணசேகர் நன்றி கூறினார்.

### காஞ்சிபுரம்




காஞ்சிபுரம் மாவட்டம் காந்தி ரோடு தேரடியில் ஐக்கிய விவசாயிகள் சங்கம் கூட்டமைப்பு சார்பில் சுதந்திர தின விழா கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது. தமிழ்நாடு விவசாய சங்கம் ஆ. மூர்த்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கே. நேரு மற்றும் மாவட்டத் தலைவர் ஜே. வெங்கடேசன், டி. ரேணுகாதேவி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

### திருச்செங்கோடு



திருச்செங்கோடு நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் முன்பு 77வது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. திருச்செங்கோடு நகர செயலாளர் எஸ். சுகுமார் தலைமையில், கட்சி மாவட்ட செயலாளர் க. அன்புமணி தேசியக் கொடி ஏற்றி வாழ்த்துரை வழங்கினார். ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ். ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் பி. தனசேகரன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ். ராமகிருஷ்ணன், திருச்செங்கோடு சிபிஐ ஒன்றிய செயலாளர் பி. எஸ். முனுசாமி உட்பட கட்சியின் முன்னணி தோழர்கள் பங்கு கொண்டனர்.

### அரியலார்



அரியலூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் முன்பு மாவட்ட குழு உறுப்பினரும், ஏ. ஐ. டி. யு. சி. பொதுச் செயலாளருமான டி. தண்டபாணி தேசிய கொடியை ஏற்றினார். நிகழ்ச்சியில் அரியலூர் நகராட்சி கா.பெருமாள், ரெ.வெங்கடேசன், மு.அமிர்தவள்ளி, சிபிஐ ஒன்றிய பொருளாளர் வெள்ளையம்மாள், ஜீவா மகளிர் குழு பெ.லட்சுமி, போ. சின்னப்பொண்ணு, மகேஸ்வரி மற்றும் பள்ளி மாணவர் மாணவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 19.08.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# சுதந்திர தின விழா பாஜகவின் பரப்புரை கூட்டமா?

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா காட்டம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் சேலத்தில் ஆகஸ்ட் 14 17 வரை நடைபெற்றது. இதில் கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளர் டி.ராஜா கலந்துகொண்டார். இடையில் செய்தியாளர்களிடம் அவர் பேசியது வருமாறு:**



“சுதந்திர தின விழாவில் பேசிய பிரதமர் மோடி, தான் பிரதமர் என்ற கண்ணியத்துடன், பொறுப்புடன் பேசவில்லை. அதனை பாஜகவின் தேர்தல் பரப்புரைக் கூட்டமாகவே மாற்றி விட்டார். சுதந்திர தினக் கூட்டத்தை எதிர்க்கட்சிகளை வசைபாடுவதற்கான கூட்டமாக நினைத்துப் பேசியிருக்கிறார்.

பாஜகவின் 9 ஆண்டுகால ஆட்சியில் நாடு நிலைகுலைந்து உள்ளதை மக்கள் அறிவார்கள். பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆனது? குறிப்பாக, ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகள், கறுப்புப் பணம் வெளிக்கொண்டு வரப்படும், ஒவ்வொரு குடிமகனின் வங்கி கணக்கிலும் ரூ. 15 லட்சம் பணம் போடப்படும் என்பதெல்லாம் என்ன ஆனது? என்று மக்கள் கேட்கிறார்கள். இந்தியாவின் ஒரு பகுதியாக உள்ள மணிப்பூரில் அமைதி நிலவ வேண்டும். உள்நாட்டுப் போரில் மக்கள் கொல்லப்படுகின்றனர். பெண்கள் சொல்ல முடியாத வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பிரதமர் வாய்மூடி மௌனமாக இருப்பது மணிப்பூர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாக இல்லை. அங்கு பதற்றம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மணிப்பூர் முதலமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். ஆனால் பிரதமர் மோடியும் அமீத்ஷாவும் அதற்குக் தயாராக இல்லை. மணிப்பூரில் ஒரு பகுதியை மற்றொரு பகுதிக்கு எதிராக நிறுத்தி அரசியல் ஆதாயம் தேட நினைக்கின்றனர்.

தேர்தல் களம் உருவாகிவிட்டது. சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடியின் பேச்சு தேர்தலுக்கான பரப்புரையாகவே இருந்தது. மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள் மற்றும் இடதுசாரி கட்சிகள் அனைத்தும் நாட்டை காப்பாற்ற வேண்டும் பாஜகவை ஆட்சி அதிகாரத்திலிருந்து விரட்ட வேண்டும் என்ற கருத்து அகில இந்திய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. எதிரணிகள் அனைவரும் ஒன்றிணைந்து உள்ளோம்

‘இந்தியா’ கூட்டணியின் முதல் கூட்டம் கர்நாடகா தேர்தலுக்குப் பிறகு பாட்னாவில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் பெங்களூரில் நடைபெற்றது. மூன்றாவது கூட்டம் ஆகஸ்ட் 31 செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் மும்பையில் நடைபெற இருக்கிறது.

ஒரு கூட்டத்திற்கும் மற்றொரு கூட்டத்திற்கும் இடையே கூட்டணியின் செயல்பாட்டில், இணக்கத்தில், முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கட்சிகளை எப்படி இணைப்பது? தேர்தல் பணிகளை எப்படி கட்டமைப்பது? என்பது குறித்தும் பேசப்படுகிறது. இந்தக் கூட்டங்கள் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இவையெல்லாம் பிரதமர் மோடிக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரதமரின் நாடாளுமன்ற உரையில், அதிர்ச்சியும் ஆற்றாமையும் வெளிப்படுவதை காண முடியும். தேர்தல் பற்றிய பயம் அவர்களுக்கு வந்துள்ளது.

நரேந்திர மோடி அவர்கள் சுதந்திர தின கொடியேற்றி வைத்து ஆற்றிய உரை வெற்று வாய்ச்சவடால். அவர் மீண்டும் பிரதமராகி விடுவேன் என்று பேசுகிறார். அவராக எப்படிப் பிரதமராக முடியும்? அதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். முக்கியமாக இது தேர்தல் பரப்புரை அல்ல, சுதந்திர தின விழா உரை. இங்கு பாஜக, ஆர்எஸ்எஸ் தலைவர் போன்று உரையாற்றக் கூடாது. பிரதமர் என்ற முறையில்தான் பேச வேண்டும். பிரதமருக்குரிய கண்ணியத்துடன் பேச வேண்டும். பிரதமர் தரும் புள்ளிவிவரங்கள் தவறானவை, இட்டுக்கட்டப்பட்டவை.

தோல்வி பயத்தில் வன்முறை மூலம் கலவரச் சூழலை உருவாக்குகிறார்கள். மணிப்பூரில் நிலைமை மிக மோசமாக இருக்கிறபோது, ஹரியானாவில் ஏன் வன்முறையை உருவாக்க வேண்டும்? இன்றைக்கு சிறுபான்மையினர் சமூக புறக்கணிப்பு செய்யப்படுகிறார்கள். முஸ்லிம்களின் கடைகளில் எதுவும் வாங்கக் கூடாது. முஸ்லிம்களின் ஓட்டல்களில் போய் சாப்பிடக்கூடாது என்ற நிலைக்கு இவர்களுடைய மத வெறி அரசியல் சென்றிருக்கிறது. மக்களைப் பிளவுபடுத்தி நாடாளுமன்றத் தேர்தலில் வென்று விடலாம் என்பது இனி நடக்காது.

பிரதமர் வேட்பாளரைத் தேர்வு செய்யும் பக்குவமும் அரசியல் முதிர்ச்சியும் எங்கள் அணியில் உள்ள கட்சிகளுக்கு இருக்கிறது. தற்போதைய நிலையில், பாஜக ஆட்சியை வீழ்த்துவது; நாட்டைக் காப்பது என்பதுதான் உடனடிக் கடமை. தலைமை யார் என்பது பிரச்சனையே அல்ல. பாஜகவை வீழ்த்தி மாற்று ஆட்சி அமைக்கின்ற சூழல் வரும் போது, எங்கள் அணியில் உள்ள தலைவர்கள் கூடி முடிவெடுப்போம். குறைந்தபட்ச வேலைத்திட்டத்தை உருவாக்குவோம். அரசாங்கம் செயல்படும் வகையில் வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்போம்‘‘ என்று டி.ராஜா தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர், “இரண்டு கோடிப் பெண்களை லட்சாதிபதி ஆக்குவோம் என்று பிரதமர் மோடி பேசுகிறார். இதைப் பெண்களே நம்ப மாட்டார்கள். மகள்களைக் காப்போம்! மகள்களைப் படிக்க வைப்போம்! என்கிறார். இன்றைக்கு மகள்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற கதி என்ன? மல்யுத்த வீராங்கனைகளுக்கு, மணிப்பூர் தாய்மார்களுக்கு நேர்ந்த வன்கொடுமைகள் பற்றி பிரதமர் மோடி வாய் திறக்காதது ஏன்?

நாடாளுமன்றத்தில் பாஜகவுக்கு பெரும்பான்மை இருக்கிறது. அப்படி இருந்தும் நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் பெண்களுக்கு உரிய இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை ஏன் சட்டமாக்கவில்லை? அந்த மசோதாவை நிறைவேற்றி பெண்களுக்கு உரிய இடஒதுக்கீடு வழங்க பிரதமர் முன்வருவாரா?” என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா கேள்வி எழுப்பினார்.

## ஆளுநரின் ஆத்திரமூட்டல்: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தனது அதிகார எல்லையை தாண்டி தமிழ்நாட்டு மக்களை ஆத்திரமூட்டும் செயலில் தீவிரம் காட்டி வருகிறார்.

அரசியலமைப்பு சட்டத்தின்படி சட்டமன்றம், அமைச்சரவை, முதலமைச்சர் ஆலோசனைப்படி செயல்பட வேண்டிய ஆளுநர், மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்கு எதிரான அதிகார வர்க்க ஏதேச்சாதிகார முறையில் செயல்பட்டு வருவது தமிழ்நாட்டின் அமைதி நிலைக்கு குந்தகம் ஏற்படுத்தி வருகிறது.

இளநிலை மருத்துவம் பயில நீட் தேர்வு எழுதி, அதிக மதிப்பெண் பெற்று கல்லூரியில் சேர்ந்து விட்ட மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் ஆளுநர் மாளிகைக்கு அழைத்து கூட்டம் நடத்தி வருகிறார்.

இதன்படி 12.08.2023 அன்று ஆளுநர் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர்கள் “நீட்” தேர்வு எழுதுவது தொடர்பான சிரமங்களை தெரிவித்து, அதற்காக பல லட்சம் ரூபாய் செலவழிக்கும் கட்டாயம் ஏற்படுவதையும் அனுபவரீதியாக எடுத்துக் கூறி, “நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு கோரும் சட்ட மசோதா 2021 செப்டம்பர் மாதம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு தாங்கள் எப்போது ஒப்புதல் அளிப்பீர்கள் என வினா எழுப்பியுள்ளார்.

இந்தக் கேள்விக்கு முறையாக பதில் அளிக்காத ஆளுநர், “நீட்” தேர்வில் இருந்து விலக்குக் கோரும் தமிழ்நாடு அரசின் தீர்மானத்திற்கு நான் ஒரு போதும் ஆதரித்துக் கையெழுத்து போட மாட்டேன்” என ஆணவத்தோடு பதிலளித்து, பெற்றோர்களை மிரட்டி அச்சுறுத்தி இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஜனநாயக முறைகளை நிராகரித்து செயல்படும் ஆளுநரின் நடவடிக்கையை தடுத்து நிறுத்த ஜனநாயக சக்திகள் ஒன்று திரண்டு போராட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குறிப்பிட்டுள்ளார்.

## ஆளுநரின் தேநீர் விருந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புறக்கணிப்பு

ஆளுநரின் தேநீர் விருந்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறக்கணிப்பதாக, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

நாட்டின் 77 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆளுநர் 15. 08. 2023 ஆம் தேதி மாலையில் வழங்கும் தேநீர் விருந்துக்கு வருமாறு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். அது கிடைக்கப் பெற்றோம்.

ஆனால், ஆளுநரின் நடவடிக்கைகளும், செயல்களும் அவரது அதிகார எல்லைகளை மீறி இருப்பதாலும், குறிப்பாக ‘நீட்’ தேர்வுக்கான விதிவிலக்கு கேட்ட மாணவரின் பெற்றோரை அவமதித்து, தற்போது அவரது பொறுப்பில் இல்லாத “நீட்” விலக்கு மசோதாவிற்கு எப்போதும் கையெழுத்து போடமாட்டேன் என ஆத்திரமூட்டி, அமைதியை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முறையிலும் ஆளுநரின் தேநீர் விருந்து நிகழ்வை புறக்கணிப்பது என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு முடிவு செய்துள்ளது என மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் தலித் இளைஞர்களை காலில் விழ வைத்து வன்கொடுமை!

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆசூர் கிராமத்தில் இரண்டு இளைஞர்களை 40க்கும் மேற்பட்டோர் காலில் விழ வைத்த அதிர்ச்சி அளிக்கும் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆசூர் கிராமத்தை சேர்ந்த சுந்த,ர் விஷால் என்ற இரு இளைஞர்களை50க்கும் மேற்பட்ட ஆதிக்க சாதியினர் கடுமையாகத் தாக்கினர். சுந்தரை இழுத்துச் சென்று அருகிலுள்ள வரலாற்றங்கரையில் வைத்து 40க்கும் மேற்பட்டோர் கால்களில் தனித்தனியாக விழ வைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்களும், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலை அந்த ஊரின் முக்கிய பிரமுகர்களே முன் நின்று செய்திருக்கின்றனர்.

இது குறித்து காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.